ஐங்குறுநூறு கதைகள்
அறுபத்தொன்பது

மு. சுயம்புலிங்கம்

நூல் விபரப் பட்டியல்

தலைப்பு : ஐங்குறுநூறு கதைகள் அறுபத்தொன்பது
ஆசிரியர் : **மு. சுயம்புலிங்கம்**
உரிமை : ஆசிரியர்க்கு
முதல் பதிப்பு : 2025
மொழி : தமிழ்
கணிணி : வியாழம் கணிணி அச்சகம்.
அச்சாக்கம் : காரணைப்புதுச்சேரி-603 202.
வெளியீடு : M S R கிரியேஷன்
பிளாட் நம்பர்: 2,3 (வெஸ்டர்ன் பார்ட்)
பாலாஜி நகர் மெயின் ரோடு
ஸ்ரீ பாலாஜி நகர் புதுப்பெருங்களத்தூர்
சென்னை - 600 063.
மு. சு. ரிஷி Ph : 9840370200

Aiyngkurunooru Kathaigal 69

Subject	:	69 Stories From Tamil Literature Aiyngkurunooru
Author	:	M. Suyambulingam
Language	:	Tamil
Edition	:	First
Size of Book	:	Demy 1x8
Point Size	:	12
No. of Pages	:	174
No. of Copies	:	100
Type & Design	:	Jupitar DTP 9962241090
Printer	:	Kabali Press. Ch-91.
Publisher	:	**M S R CREATION** Chennai - 600 063.
Price	:	**180/-**

ஆசிரியர் உரை

17-05-2025

சங்க இலக்கியத்தில் "ஐங்குறுநூறு" என்று ஒரு புத்தகம் இருக்கிறது, அதில் ஐநூறு பாட்டு இருக்கு. தமிழறிஞர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் இந்த ஐநூறு பாட்டுக்களுக்கும் அழகாக உரை எழுதியிருக்கிறார்.

சுயம்பு இந்த ஐநூறு பாட்டுக்களிலிருந்து அறுபத் தொன்பது கதைகள் எழுதியிருக்கிறான். இந்த அறுபத் தொன்பது கதைகளும் மிகச் சிறந்த கதைகள். இந்த அறுபத் தொன்பது கதைகளிலிருந்து நான், உங்களுக்கு ஒரு கதை சொல்லுகிறேன்.

ஒரு குளம். அந்தக் குளத்தில் எப் போதும் தண்ணீர் இருக்கும். அதில் ஒரு முதலை இருக்கு. அது பெரிய முதலை. அந்தப் பெரிய முதலைக்குப் பக்கத்தில், சின்னச் சின்ன மீன்கள் மகிழ்ச்சியாக நீந்தி நீந்தி விளையாடிக் கொண்டிருக் கின்றன. அந்தப் பெரிய முதலை, அந்தச் சின்னஞ் சிறு மீன் களை ஒண்ணுமே பண்ணல. ஒரு பெரிய வாளை மீன், தண்ணீரைக் கிழித்துக் கொண்டு, அந்த முதலைக்குப் பக்கத்தில் வருகிறது.

அந்த வாளை மீனை அந்த முதலை விழுங்கி விட்டது.

ஓரம்போகியார் சொல்கிறார்..

"முதலை போத்து முழு மீன் ஆரும்."

பாசத்துடன்
மு.சுயம்புலிங்கம்.

பொருளடக்கம்

வரிசை எண்	ஐங்குறு நூறு பாட்டுக்களின் எண்
01 முதலை	05
02 பூக்கள்	19
03 நாணல் பூக்கள்	20
04 சகதிக்காடு	21, 22, 23.
05 இவன் உன் குழந்தை	66
06 பேய்	70
07 நீச்சல்	72, 73, 74
08 பறைக் கஞைர்கள்	81
09 திருமணம் ஆன ஒரு பெண்	83
10 புல்லுக் காடு	87
11 எருமை	95
12 கன்றுக் குட்டி	97
13 பாகல் கொடி	99
14 தங்க ஆபரணங்கள்	100 முதல் 130
15 மணமகன்	101, 102, 105, 134
16 ஒரு நாரையும், ஒரு உள்ளான் குருவியும்	151 முதல் 160 வரை
17 ஒரு வெள்ளக் காக்கா	167, 168, 169, 170
18 நாரை	180
19 காதலி	191, 197, 199
20 ஊற்றுத் தண்ணீர்	203
21 ஊர்க்காப்பாளர்	206
22 ஒரு யானைக் குட்டி இப்பொழுதான் பிறந்திருக்கிறது	216

23 ஒரு புலி முழங்குகிறது	218
24 ஒரு கன்னிஆடு	238
25 மதம்	239
26 பொம்மை	246
27 மணம்	254
28 கடைக்குட்டிப்பெண்	255, 256, 257, 258,259
29 தாயில்லாப்பிள்ளை	
30 ஒரு பெண் குரங்கு	272
31 கோழை	274
32 நீர்க்குமிழி	275
33 மழை மேகங்கள்	276
34 குண்டுக்கல்	277
35 எங்கள் ஊர்	279
36 கிளி	284
37 தினைமாவு	285
38 மொச்சைச் செடிகள்	286
39 வருடை மான்கள்	287
40 மழலை மொழி	289
41 என் காதலி வாழும் நல்ல ஊர்	291
42 தீ (295-ல் கதை ஒன்று)	295
43 குருவி (295-ல் கதை இரண்டு)	295
44 இலவம் பூக்கள்	301
45 ஆலமரம்	303
46 கிடங்கு	304
47 தாய் மண்	305
48 மூங்கில் காடு	307
49 தலைப்பிள்ளை	309
50 மனைவி	310
51 ஒரு கிராமத்துப்பாட்டு	311
52 ஒரு பறவை	321
53 வெயில்	322
54 கள்ளிக்காடு	323

55 இலை ஒலி 325
56 ஓடை 326
57 நடுக்காடு 327
58 கழுகு 335
59 பூ பூக்கும் காலம் 347
60 பிஞ்சுகள் 351
61 ஒரு நரி பயிராகிறது 354
62 பொற்காலம் 356
63 பாதை 359
64 செம்மண்ணூர் 363
65 உப்புக்கண்டம் 365
66 ஒரு ஆண் மான் 373
67 சாபம் 376
68 மகன்றில் பறவைகள் 381
69 ஒரு தாய்க்கு, பெண் மக்களால் ஏற்படும் துன்பம் 382

கதை – 1

முதலை

ஒரு சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு குளம் இருக்கு. அது ரொம்ப ஆழமான குளம். அந்தக் குளத்தில், ஒரு, முதலை இருக்கு. அது, ஒரு, பெரிய, ஆண் முதலை.

அந்தப் பெரிய முதலைக்கு, முன்னால், சின்னச் சின்ன மீன்கள் நீந்தி நீந்தி, விளையாடிக் கொண்டிருந்தது. அந்தப் பெரிய முதலை, சின்னச் சின்ன அந்த மீன்களை, ஒண்ணுமே பண்ணல.

அந்தக் குளத்தில் ஒரு பெரிய வாளைமீன் இருக்கு. அந்த வாளைமீன், தண்ணீரைக் கிழித்துக் கொண்டு, வேகமாக அந்த முதலைக்குப் பக்கத்தில் வந்தது. அந்த முதலை அந்த வாளை மீனை, அப்படியே முழுசாய் விழுங்கிவிட்டது.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
பாட்டு - 05

பாட்டு - 05

"வாழி ஆதன்! வாழி அவிளி!
பசி இல் ஆகுக! பிணி சேன் நீங்குக!
என, வேட்டாளே! யாயே: யாமே,
"முதலைப் போத்து முழுமீன் ஆரும்
தந்துறை ஊரன் தேர் எம்
முன்கடை நிற்க." என, வேட்டேமே."

கதை – 2

பூக்கள்

ஒரு சின்னக் கிராமம்.

அந்தக் கிராமத்தில், அழகான ஒரு சோலை இருக்கு. அந்தச் சோலை, அழகான, ஒரு பெரிய, மணல் மேட்டின் மேல் இருக்கு. அந்தச் சோலையில், ஒரு, பெரிய, மாமரம் இருக்கு. அந்தப் பெரிய மாமரத்தின் கிளைகள் கூட பெருசு பெருசாத்தான் இருக்கு. அந்த மாமரம், இப்பத்தான், பூக்க ஆரம்பித்திருக் கிறது. அந்த இளம் பூக்கள், மணமாய் மணந்து கொண்டிருக்கிறது.

அந்தச் சோலையில், நாணல்களும் இருக்கு. அந்த நாணல்கள், உயரமா வளர்ந்திருக்கு. அந்த நாணல் பூத்திருக் கிறது.

அந்த நாணல் பூக்கள், அந்த மாமரத்தில் பூத்திருக்கிற, இளம் மாம்பூக்களைத் தொட்டு வருடிக் கொடுக்கிறது.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
பாட்டு - 19.

பாட்டு 19.

"எக்கர் மாஅத்துப் புதுப்பூம் பெருஞ்சினை
புணர்ந்தோர் மெய்ம்மணம் கமழும்
தண் பொழில் வேழ வெண்பூ
வெள் உளை சீக்கும் ஊரன் ஆகலின் கலங்கி
மாரி மலரின் கண்பனி உகுமே."

கதை – 3

நாணல் பூக்கள்

ஒரு, சிறிய கிராமம்,

அந்தச் சிறிய கிராமத்தில், ஒரு சிறிய குளம் இருக்கு. அந்தக் குளத்தில், ஒரு தாமரைப்பூ, அழகாகப் பூத்திருக்கிறது. அந்தத் தாமரைப்பூ, ரொம்பப் பெரிய பூ.

அந்தக் குளத்துக்கு, ஒரு வண்டு வருகிறது, அது ரொம்பச் சிறிய வண்டு. அந்த வண்டுக்கு ஆறு கால்கள் இருக்கு. இரண்டு சிறகுகள் இருக்கு. அந்தச் சிறிய வண்டுக்கு அதன் சிறகுகள் ரொம்ப்ப அழகாருக்கு, அந்த வண்டு, அந்தத் தாமரைப் பூவில் முட்டையிடுகிறது.

அந்தக் குளத்தில் நாணல்களும் இருக்கு. அந்த நாணல்கள் பூத்திருக்கிறது. அந்த நாணல் பூக்கள் நீளமாருக்கு. நீளமான அந்த நாணல் பூக்கள், அந்தச் சிறிய வண்டு, அந்தப் பெரிய தாமரைப் பூவில் இட்ட முட்டைகளை, தட்டித் தட்டி அழித்துக் கொண்டிருக்கிறது.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
பாட்டு - 20.

பாட்டு - 20.

"அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்
காம்பு கண்டன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி ஊரனை உள்ளியென்
இறையேர் எல்வளை நெகிழ்பு ஓடும்மே."

கதை – 4

சகதிக் காடு

ஒரு ஊர்,

அந்த ஊர்ல, ஒரு, ஊரணி இருக்கு. அந்த ஊரணியில், அல்லிப் பூக்கள், ஏராளமாய்ப் பூத்துக் கிட்டிருக்கு.

அந்த ஊரணியைச் சுற்றி, ஒரே சகதிக்காடு. அந்தச் சகதிக் காட்டில், முள்ளிச் செடிகள், காடு மாதிரி வளர்ந்திருக்கு. அந்த முள்ளிச் செடிகளின் அடியில், நண்டுகள் செலவு தோண்டிக் குடியிருக்கு. அந்த நண்டுகள், அந்தச் சகதிக் காட்டில் ஓடி விளையாடுகின்றன. அவைகளுக்கு அலுப்புத் தட்டும் போது, அவைகள் அல்லிப் பூக்களைக் கடித்துக் கடித்து, அதை நறுக்கி நறுக்கி விளையாடுகின்றன,

அந்த ஊர்ல, அழகான, ஒரு, இளம்பெண் இருக்கிறாள். அவளுக்கு நிறையத் தோழிகள் இருக்கிறார்கள். அவள் தோழிகளோடு, அந்த ஊரணிக்கு வந்திருக்கிறாள். அவர்கள் பூ பறித்து விளையாடுகிறார்கள். அவர்களுக்கு அதில் சலிப்பு ஏற்படுகிறது. அவர்கள் இப்போது நண்டு பிடித்து விளையாடுகிறார்கள்.

ஒரு நண்டு அந்தச் சகதிக் காட்டில், ஓடி ஓடி, விளையாடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சின்ன நண்டுக்கு அதன் மேல் ஓட்டில் அழகான சின்னச் சின்னப் புள்ளிகள் இருக்கிறது. அழகான அந்தச் சின்ன நண்டை அந்தப் பெண்கள் துரத்துகிறார்கள். அவர்கள் அந்த நண்டிற்குப் பின்னாலேயே

ஓடுகிறார்கள். அந்த நண்டு அவர்களை ஏச்சம் காட்டுகிறது. அது, நெட்டோட்டமாய் ஓடாமல், குறுக்கே குறுக்கே, மறித்து மறித்து ஓடுகிறது. அந்தப் பெண்களும் இந்த நண்டைத் துரத்திக் கொண்டு, அந்த நண்டுக்குப் பின்னாலேயே குறுக்கே குறுக்கே, மறித்து மறித்து ஓடுகிறார்கள்.

அழகான அந்த இளம்பெண், அவள் தோழிகளோடு, அந்தச் சகதிக் காட்டில் ரொம்ப நேரம் மகிழ்ச்சியோடு விளை யாடிக் கொண்டிருந்தாள்.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
பாட்டு - 21, 22, 23.

பாட்டு 21, 22, 23.

"முள்ளி நீடிய முதுநீ ரடைகரை
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்
தண்துறை ஊரன் தெளிப்பவும்
உண்கண் பசப்பது எவன்கொல் அன்னாய்..!

அல்லல் ஆடிய புள்ளிக் களவன்
முள்ளி வேர்அளைச் செல்லும் ஊரன்
நல்ல சொல்லி மணந்து இனி
நீயேன் என்றது எவன்கொல் அன்னாய்..!

முள்ளி வேர்அளைக் களவன் ஆட்டி
பூக்குற்று எய்திய புனல்அணி ஊரன்
தேற்றம் செய்துநம் புணர்ந்து இனித்
தாக்கணங்கு ஆவது எவன்கொல் அன்னாய்..!"

கதை – 5

இவன்..உன் குழந்தை

ஒரு, சிறிய நகரம்.

அந்த நகரத்தில், அரண்மனை மாதிரி, ஒரு, பெரிய மாளிகை. அந்தப் பெரிய மாளிகையில், ஒரு தனி அறையில், கணவனும் மனைவியும், உட்கார்ந்திருக்கிறார்கள். அந்தப் பெண்ணின் மடியில், அவள் குழந்தை, இருக்கிறது. அந்தக் குழந்தை இப்போதுதான் நடக்க ஆரம்பித்திருக்கிறான்,

அந்தப் பெண்ணின் கணவன், ஒரு பரத்தையின் வீட்டில், இவ்வளவு நாளும் தங்கியிருந்தான். அவன்.. மனைவியிடம் இன்றுதான் வந்திருக்கிறான்.

அந்தப் பெண்..கணவனிடம் சொல்லுகிறாள்..

" நான்.. உன்னிடம், கோவப்பட மாட்டேன். நான், எதற்காக, உன்னை, பகைத்துக் கொள்ள வேண்டும்."

" நம், குழந்தையைப் பார் "

" இவன்..உன் குழந்தை "

" நீ..உன் குழந்தையைப் பார்ப்பதற்கு, உன் தேரில் ஏறி, உன் மாளிகைக்கு வருவதற்கு..இங்கே வரவிடாமல், உன்னை, தடுக்கிற பெண்யார்..? "

" என்னிடம் எதையும் மறைக்காதே "

" என்னிடம் உண்மையைச் சொல். "

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 66)

(பாட்டு 66)

"உடலினென் அல்லேன் பொய்யாது உரைமோ
யாரவள் மகிழ்ந தானே தேரோடு
தளர்நடை புதல்வனை உள்ளிநின்
வளமனை வருதலும் வெளவி யோளே."

கதை – 6

பேய்

ஒரு, சிறிய நகரம்,

அந்தச் சிறிய நகரத்தில், ஒரு பெரிய மாளிகையில், ஒரு, இளைஞனும், அவன் மனைவியும், மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தார்கள். அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது, மனைவி, குழந்தை பெத்ததும், அந்த இளைஞன் ஒரு பரத்தை வீட் டிற்குப் போனான்.அவன், அந்தப் பரத்தை வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டான்.

அந்த இளைஞன், மனைவியிடம், இன்று, வந்திருக்கிறான்.

அந்தப் பெண், கணவனிடம் சொல்லுகிறாள்..

"உனக்குப் பிரியமான அந்தப் பெண், தினமும் குளிக்கிறாள், தினமும் புதுப்புதுச் சேலை உடுத்துகிறாள்., காலையிலும் மாலையிலும், அவள் தலை வாருகிறாள். அவள் தலைநிறைய பூ வைத்துக் கொள்கிறாள்.அந்தப் பெண், கமகமன்னு மணந்து கொண்டிருக்கிறாள்."

"உனக்கு வாழ்க்கைப்பட்ட நான், உன் பிள்ளையைப் பெற்றேன். உன் பிள்ளையை, நான்தான் வளர்த்துக் கொண்டிருக்கிறேன்."

"பிள்ளையைப் பெத்து, உன் பிள்ளையை வளர்த்துக் கொண்டிருக்கிற நான், உனக்கு, பேய் மாதிரி தெரிகிறேன்."

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 70)

(பாட்டு 70)

"பழனப் பல்மீன் அருந்த நாரை
கழனி மருதின் சென்னிச் சேக்கும்
மாநீர்ப் பொய்கை யாணர் ஊர
தூயர் நறியர்நின் பெண்டிர்
பேஎய் அணையம்யாம் சேய்பயந்தனமே."

கதை – 7

நீச்சல்

நானும், என் மனைவியும், ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தோம். நாங்கள் குளித்துக் கொண்டிருந்த அந்தப் படித் துறையில், குவளைப் பூக்கள் மணமாய் மணந்து கொண்டிருந்தது

என் மனைவி இளம்பெண், பேரழகி. அவள் அடி வயிற்றில் ஏராளமான தேமல்கள் இருக்கிறது. அந்தத் தேமல்கள் அழகாக இருக்கிறது. அவள், விலை உயர்ந்த, பொன் ஆபரணங்கள் அணிந்திருக்கிறாள். அது, அவள் உடம்பில் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவள், தழை ஆடை உடுத்தி இருக்கிறாள். அது, ஆம்பல் இலைகளால், தொடுக்கப்பட்டது. அந்தத் தழை ஆடை, அவள் உடம்பில், அழகாக ஆடி, அசைந்து கொண்டிருக்கிறது.

எங்கள் ஆற்றில், குளிர்ந்த தண்ணீரில், நாங்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது, என் மனைவி, கரையிலிருந்த ஒரு மருத மரத்தில் ஏறினாள். அவள், அந்த மருத மரத்தில் இருந்து ஆற்றில் குதித்தாள். அப்போது, என் மனைவியின் அடர்த்தியான கருங்கூந்தல் விரிந்தது.

வானத்தில் இருந்து இறங்கி வருகிற,ஒரு மயிலின் தோகையைப் போல், அவ்வளவு அழகாக இருந்தது. என் மனைவியின் கூந்தல்.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 72, 73, 74)

(பாட்டு 72, 73, 74)

"வயல்மலர்ஆம்பல் கயில்அமை நுடங்குத்தழைத்
திதலை அல்குல் துயல்வரும் கூந்தல்
குவளை உன்கண் ஏஎர் மெல்லியல்
மலர்ஆர் மலிர்நிறை வந்தனப்
புனலாடு புணர்த்துணை ஆயினள் எமக்கே.

வண்ண ஒண்தழை நுடங்க வால் இழை
ஒண்ணுதல் அரிவை பண்ணைப் பாய்ந்தனக்
கள்நறும் குவளை நாறித்
தண்ணென்று இகினே பெருந்துறைப் புனலே.

விசும்பு இழி தோகைச் சீர்போன் றிசினே
பசும்பொன் அவிர் இலை பைய நிழற்ற
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணைப் பாய்வோள் தன் நறுங் கதுப்பே."

கதை –8

பறைக் கலைஞர்கள்

ஒரு பெரிய்ய்ய வயல்,

அந்த வயலில் இன்று நெல் அறுவடை.

நெல் அறுவடை செய்ய உழவர்களும், உழவர் வீட்டுப் பெண்களும் அந்தப் பெரிய வயலுக்கு வந்திருக்கிறார்கள்.

அந்தப் பெரிய வயலில், ஏராளமான பறவைகள், இரை மேய்ந்து கொண்டிருக்கிறது.

நெல் அறுவடைக்கு முன், அந்தப் பறவைகளை விரட்ட, பறைக்கலைஞர்கள் பறையை ஓங்கி அடிக்கிறார்கள். பறைச் சத்தத்தைக் கேட்டதும் அந்தப் பறவைகள், அந்தப் பெரிய நெல் வயலில் இருந்து போய்விட்டது.

அந்தப் பெரிய நெல் வயலில், ஒரு நாரை மட்டும் நின்று கொண்டிருக்கிறது. அது தன் கால்களுக்கு அடியில், ஒரு சிறிய வயல் ஆமையை மிதித்துக் கொண்டிருக்கிறது. அந்த நாரை அந்த ஆமையை மலத்திப் போடுகிறது. அது அந்த ஆமையின் வயிற்றைக் குத்திக் குத்தி, உடைக்கிறது. அந்தச் சிறிய வயல் ஆமையின் வயிற்றில், கறி வெள்ளோர்னு இருக்கு.

அந்த நாரை அந்தக் கறியை வயித்துக்கும் தின்னுட்டு மிச்சத்தை அங்கேயே போட்டுவிட்டுப் பறந்து விட்டது.

பறைக் கலைஞர்கள் நாரை தின்றுவிட்டு மிச்சம்

வைத்த அந்தச் சிறிய வயல் ஆமையின் கறியை, தின்று கொண்டிருக்கிறார்கள்.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 81)

(பாட்டு 81)

"குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை
அறிபறை வினைஞர் அல்கு மிசைக் கூட்டும்
மலரணி வாயில் பொய்கை ஊரநீ
என்னை நயந்தனன் என்றிநின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே."

கதை – 9

திருமணமான ஒரு இளம்பெண்

ஒரு சிறிய நகரம்.

அந்தச் சிறிய நகரத்தில் ஒரு பெரிய வீடு.

அந்த வீட்டில், திருமணமான ஒரு இளம் பெண்ணும் அவள் கணவனும் இருக்கிறார்கள்.

அந்த இளம்பெண், அவள் கணவனிடம் சொல்லு கிறாள்..

"நீ..என் கணவன்.."

"நீ..என்னை, திருமணம் செய்து கொண்டிருக் கிறாய்.."

"நான்..உன்னோடு வாழ, ஆசையோடு வந்திருக் கிறேன்.."

"நீ..என்னிடம்..வாழவே இல்லை.."

"நீ..என்னிடமிருந்து, மெல்ல மெல்ல விலகி, பரத்தை களிடம் போய்விட்டாய்.."

ஓரம் போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 83)

(பாட்டு 83)

"மணந்தனை அருளாய் ஆயின் பையத்
தனந்தனை ஆகி உய்ம்மோ நும் ஊர்
ஒண்தொடி முன்கை ஆயமும்
தண்துறை ஊரன் பெண்டு எனப்படற்கே."

கதை – 10

புல்லுக் காடு

ஒரு மேய்ச்சல் நிலம்.

அந்த மேய்ச்சல் நிலத்தில், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை புற்கள், பச்சைப் பசேலென்று ஓங்கி வளர்ந்திருக்கிறது.

அந்தப் புல்லுக் காட்டுக்கு, ஒரு தாத்தா, தன் பசுக்களை, மேய்ச்சலுக்குக் கொண்டு வந்திருக்கிறார். அந்தப் பசுக்கள், அந்தப் புற்களை வயித்துக்கு மேய்ந்துவிட்டுப் படுத் திருக்கின்றன. படுத்திருக்கிற அந்தப் பசுக்கள் நிதானமாக, அசை போட்டுக் கொண்டிருக்கிறது.

அந்தப் புல்லுக் காட்டில், ஒரு தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டத்தில், ஏராளமான மா மரங்கள் இருக்கின்றன. அந்த மாமரங்களில் பழங்கள் பழுத்துத் தொங்கிக் கொண் டிருக்கிறது.

தாத்தா, அந்த மாந்தோட்டத்தில் வந்து நிற்கிறார். அவர் சிவதைப் பூக்களைச் சரமாகத் தொடுத்து, அந்தப் பூச்சரத்தை அவர் தலையில் சூடி இருக்கிறார். அவர், கையில், ஒரு கரும்பு வைத்து இருக்கிறார். அவர் அந்தக் கரும்பால் மா மரத்தில் மாம்பழங்களைத் தட்டித் தட்டி பழம் பறித்துக் கொண்டிருக்கிறார்.

ஓரம் போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 87

(பாட்டு 87)

"பகன்றைக் கண்ணிப் பல்ஆன் கோவலர்
கரும்பு குணிலா மாங்கனி உதிர்க்கும்
யாணர் ஊர நின் மனையோள்
யாரையும் புலக்கும் எம்மை மற்று எவனோ."

கதை – 11

எருமை

ஒரு வயல், அது ரொம்பப் பெரிய வயல்.

அந்தப் பெரிய வயலில் நெல் பயிர்கள், கதிர்வாங்கிக் கொண்டு இருக்கின்றன.

அந்தப் பெரிய வயலில், ஒரு, வரப்பு, ரொம்ப அகலமா இருக்கு. அந்த வரப்பில் , ஒரு குடிசை இருக்கு. அந்தக் குடிசைக்கு முன்னால், ஒரு எருமை கெட்டிக் கெடக்கு. அந்த எருமைக்கு, உறுதியான கொம்புகள். அந்தக் கொம்புகள், கன்னங்கரேர் என்று, கருப்பா இருக்கு.

அந்த மொறட்டு எருமை, தன்னை, கெட்டிப் போட்டு இருக்கிற கயிற்றை அறுப்பதற்கு, முயற்சி செய்து கொண்டு இருக்கிறது. அது முக்கி முக்கி, தம்பிடித்துக் கொண்டு கயிற்றை இழுக்கிறது.

கயிறு அறுந்து விட்டது.

அந்த எருமை, அந்தப் பெரிய நெல் வயலுக்குள் இறங்குகிறது. அது, அந்த நெல் பயிர்களை எல்லாம் வளைத்துப் பிடித்துத் தின்கிறது. அந்த மொறட்டு எருமை நெல் பயிர்களை எல்லாம் சகட்டு மேனிக்கு மிதித்து நாசப் படுத்திக் கொண்டு இருக்கிறது.

ஓரம்போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 95)

(பாட்டு 95)

"கருங்கோட்டு எருமை கயிறு பறிந்து அசையி
நெடுங்கதிர் நெல்லின் நாள்மேயல் ஆரும்
புனல் முற்று ஊரன் பகலும்
படர்மலி அருநோய் செய்தனன் எமக்கே."

கதை – 12

கன்றுக்குட்டி

அறுவடை முடிந்த ஒரு வயல்.

அந்த வயலில், சிவதைக் கொடிகள், கொடிவீசிப் படர்ந்திருக்கிறது. அது பூத்திருக்கிறது. அந்தப் பூக்கள், வெள்ளை வெளேர் என்று, அழகாக இருக்கிறது.

அந்த வயலில், ஒரு தாய் எருமையும், அதன் கன்றுக் குட்டியும் இரை மேய்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தாய் எருமையின் கொம்புகளில், அறுந்த சிவதைக் கொடிகள் சிக்கி, சுற்றிக் கொண்டிருக்கிறது.

தாய் எருமை தன் கன்றுக் குட்டியை தனக்குப் பக் கத்தில் வரும்படி அழைக்கிறது.

குனிந்து, இரை மேய்ந்து கொண்டிருந்த அந்தக் கன்றுக் குட்டி தலையை உயர்த்தி, தன் தாயைப் பார்க்கிறது.

தன் தாயின் கொம்புகளில் சுற்றியிருக்கிற சிவதைக் கொடிகளைப் பார்த்ததும், அந்தக் கனறுக் குட்டி பயந்து நடுங்கி விட்டது.

அந்தக் கன்றுக் குட்டி நினைக்கிறது..

" இது என் தாய் இல்லை."

" இது என்னைக் கொல்ல வந்திருக்கிற ஒரு கொலை கார மிருகம். "

அந்தக் கன்றுக் குட்டி அதன் தாயிடம் போகவேயில்லை.

ஓரம் போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 97)

(பாட்டு 97)

"பகன்றை வால்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக்கன்று வெரூஉம்
பொய்கை ஊரன் மகள் இவள்
பொய்கைப் பூவினும் நறுந்தண் ணியளே."

கதை – 13

பாகல் கொடி

ஒரு வயல்.

அது ரொம்பப் பெரிய வயல்.

அந்த வயலில், நெல் பயிர்கள், உயரமாக வளர்ந்து இருக்கிறது. அந்த நெல் பயிர்கள், பச்சைப் பசேர் என்று, பசுமை யாக இருக்கிறது.

அந்த வயல் வரப்புக்களில், பாகல் கொடிகள் கொடி வீசிப் படர்ந்து இருக்கிறது. அந்தப் பாகல் கொடிகள், நெல் பயிர்களைப் பின்னிக் கொண்டு இருக்கிறது. அந்தப் பாகல் கொடிகளில், எறும்புகள், கூடுகட்டி வாழ்ந்து கொண்டு இருக்கிறது.

ஒரு, எருமைக் கிடா, அந்தப் பெரிய வயலில் இறங்கி, நெல் பயிர்களைத் தின்று கொண்டு இருக்கிறது, அந்த எருமைக் கிடா, அந்தப் பாகல் கொடிகளையும், அந்தப் பாகல் கொடிகளில் கூடுகெட்டியிருக்கிற எறும்புக் கூடுகளையும், மிதித்து அழித்துக் கொண்டு இருக்கிறது.

ஓரம் போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 99)

(பாட்டு 99)

"பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி எருமை கதிரொடு மயக்கும்
பூங்களுல் ஊரன் மகள் இவள்
நோய்க்கு மருந்து ஆகிய பணைத் தோளோளே."

கதை – 14

தங்க ஆபரணங்கள்

ஒரு, பெரிய கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு, பெரிய குளம் இருக்கு,

ஒரு பெண், அந்தக் குளத்தில், குளிக்க வந்திருக் கிறாள்.

அவள், குளிப்பதற்கு முன், அவள், அணிந்து இருக்கிற தங்க ஆபரணங்களைக் கழட்டுகிறாள். அவள், அந்த ஆபரணங்களை அந்தக் குளத்தாங்கரையில், ஒரு குழி தோண்டிப் புதைத்து வைக்கிறாள்.

காற்று, பலமாக வீசிக் கொண்டு இருக்கிறது. பலமான அந்தக் காற்று, ஓரிடத்தில் உள்ள மண்ணை அள்ளி, இன்னொரு இடத்தில் அதைக் குவித்துக் கொண் டிருக்கிறது.

அந்தப் பெண், குளிச்சிட்டு, கரைக்கு வருகிறாள்.

அவள், புதைத்து வைத்த ஆபரணங்களைத் தேடு கிறாள்.

அவள், ஆபரணங்களை புதைத்து வைத்த இடம், அவளுக்கு அடையாளம் தெரியவில்லை.

அவள், அந்தக் குளத்தாங்கரை நெடுகிலும் மண்ணைத் தோண்டித் தோண்டித் தேடிக் கொண்டு இருக்கிறாள்.

ஒரு, எருமைக்கிடாய், அந்தக் குளத்திற்கு வருகிறது. அது, கொம்பில் மண் எடுத்து விளையாடுகிறது.

அந்த எருமை, கொம்பில் மண் எடுத்த ஒரு இடத்தில்,

அந்தப் பெண் புதைத்து வைத்த அந்தத் தங்க ஆபரணங்கள், சூரிய ஒளியில் பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது.

அந்தப் பெண், ஒளி வீசுகிற அவளுடைய தங்க ஆபரணங்களை எடுத்து அதை, புன்னகையோடு அணிந்து கொள்கிறாள்.

ஓரம் போகியார்
ஐங்குறுநூறு
(பாட்டு 100

(பாட்டு 100)

"புனலாடு மகளிர் இட்ட ஒள் இழை
மணல் ஆடு சிமையத்து எருமைக் கிளைக்கும்
யாணர் ஊரன் மகள் இவள்
பாணர் நரம்பினும் இன்கிள வியளே."

கதை – 15

மணமகன்

எங்க ஊரு, ஒரு, சிறிய, குக்கிராமம். எங்க ஊருல ஒரு பெரிய கடல் இருக்கு. எங்க கடல் எப்பமும் எறைச்சல் போட்டுகிட்டும் எப்பமும் முழங்கிகிட்டும்தான் இருக்கும். எங்க கடலில், மீன் பிடிச்சித் தின்னுக்கிட்டு இருக்கிற, கடல் பறவைகளும் கூட இடைவிடாமல் சத்தம் போட்டுக்கிட்டு தான் இருக்கு.

எங்க ஊருல, பெரிய்ய கடல் இருக்குல்ல..அதனால எங்க ஊரு எப்பமும் குளிர்ச்சியா இருக்கும்.

எங்க ஊரு கடல்கரையில், முத்துக்கள் கிடக்குது. அழகான, எங்கள் கடல்கரை குருத்து மணல் மேல், அந்த முத்துக்கள் ஒளி வீசிக்கிட்டு கிடக்கு..

அழகான, எங்க ஊரு கடல்கரை வழியா, எங்க ஊருக்கு, ஒரு பெரிய தேர் வந்துக்கிட்டுருக்கு. நாலுகால் பாய்ச்சல்ல, பாய்ந்து பாய்ந்து ஓடுகிற குதிரைகளை, அந்தத் தேரில் பூட்டியிருக்கு. எங்க கடல்கரையில் அடர்த்தியா படர்ந்து இருக்கிற அடப்பம் கொடிகளை, அத்துப் போட்டு கிட்டு வருது. அந்தப் பெரிய தேர் எங்க ஊரு கடல் கரையில.. குருத்து மண்ணா கெடக்குல்ல..அதனாலதான் அந்தப் பெரிய தேர், மெல்ல..மெல்ல, அசைந்து அசைந்து வந்துக் கிட்டேயிருக்கு. அந்தப் பெரிய தேர்ல இருந்து மணிச் சத்தம் வந்துகிட்டேயிருக்கு.

அந்த மணிச் சத்தம் கேக்குறதுக்கு இனிமையா யிருக்கு. அந்தப் பெரிய தேர்ல, மணமகன் வாராரு.

அந்த மணமகனுக்கும், எங்க அக்காளுக்கும் இன்னைக்குத் திருமணம்.

அம்மூவனார்
ஐங்குறுநூறு
(பாட்டு 101, 102, 105, 134)

(பாட்டு 101, 102, 105, 134)

"அன்னை வாழி வேண்டு அன்னை உதுக்காண்
ஏர்க்கொடிப் பாசடும்பு பரிய ஊர்பு இழிபு
நெய்தல் மயக்கி வந்தன்று நின் மகள்
பூப்போல் உன்கண் மரீஇய
நோய்க்கு மருந்து ஆகிய கொண்கன் தேரே."

"அன்னை வாழி வேண்டு அன்னை நம்மூர்
நீல நிறப் பெருங்கடல் புள்ளின் ஆளாது
துன்புறு துயரம் நீங்க
இன்புற இசைக்கும் அவர் தேர்மணிக் குரலே."

"அன்னை வாழி வேண்டு அன்னை முழங்கு கடல்
திரைதரும் முத்தம் வெண்மணல் இமைக்கும்
தண்ணம் துறைவன் வந்தெனப்
பொன்னினும் சிவந்தன்று கண்டிசின் நுதலே."

"காண்மதி பாண இருங்கழிப்...
பாய்பரி நெடுந்தேர்க் கொண்கநொடு
தான்வந்தன்று என்மாமைக் கவினே."

கதை – 16

ஒரு நாரையும் ஒரு உள்ளான் குருவியும்

ஒரு நாரையும், ஒரு உள்ளாங் குருவியும் நெருங்கிய சிநேகிதிகள்.

உள்ளாங் குருவிக்கு, ஒரு குஞ்சு, இருந்தது. அது, திடீர்னு, செத்துப் போச்சு.

தன், சிநேகிதியின் குஞ்சு, செத்துப் போனதைக் கேள்விப்பட்ட அந்த நாரை அது, தனக்கு ஏற்பட்ட துயர மாகக் கருதியது. அந்த நாரை கேவிக் கேவி, அழுதது.

அந்த நாரை, துக்கம் கேட்பதற்காக, உடனே புறப் பட்டு, தன் சிநேகிதியிடம் போனது. தான் பெத்த, தன் செல்லக் குஞ்சை, சாகக் கொடுத்த தன் சினேகிதியை நேரில் பார்த்ததும், அந்த நாரையின் நெஞ்சு சோகத்தில் பட படன்னு துடித்தது. அது, கதறிக் கதறி அழுதது. அந்த நாரை தன் சிநேகிதியின் கிட்டத்தில் உட்கார்ந்தது. அது, தன் அலகால், தன் சினேகிதியை வாஞ்சையோடு, தடவிக் கொடுத்தது, அது, தன் சினேகிதியின் கூடவே தன் சினேகிதிக்கு ஆறுதலாக அன்று பகல் பூராவும் உள்ளாங் குருவியோடு இருந்தது. அந்த நாரை அன்று பகல் முழுதும் சாப்பிடவில்லை. அந்த நாரைக்கு அகோரமாகப் பசித்தது. அந்த நாரை பசியைத் தாங்கிக் கொண்டு தன் சினேகிதிக்குத் துணையாக, சினேகிதியின் கூடவே இருந்தது.

அந்த நாரை பொழுது மறைஞ்சதுக்குப் பிறகு தான், தன் சினேகிதியிடம் இருந்து புறப்பட்டது.

அந்த நாரை அன்று இரவு, அழகான ஒரு கடல் கரைச் சோலையில், தங்கி இருந்தது.

அம்மூவனார்
ஐங்குறுநூறு
(பாட்டு 151* to *160)

(பாட்டு 151 முதல் 160 முடிய)

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப நக்க கண்போல் நெய்தல்
கள்கமழ்ம்பு ஆனாத் துறைவர்க்கு
நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கையறுபு இரற்றும் கானலம் புலம்பத்
துறைவன் வரையும் என்ப
அறவன் போலும் அருளுமார் அதுவே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
உளற ஒழிந்த தூவி குவுவுமணல்
போர்வில் பெறூஉம் துறைவன் கேண்மை
நன்னெடும் கூந்தல் நாடுமே மற்றே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானல் சேக்கும் துறைவனோடு
யான் எவன் செய்கோ பொய்க்கும் இவ்வூரே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவர்க்குப்
பைஞ்சாய் பாவை ஈன்றனன் யானே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்ப ஒழிந்த செம்மணுந் தூவி
தென்கழிப் பரக்குந் துறைவன்
எனக்கோ காதலன் அனைக்கோ வேரே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலை இருந்து மாலை சேக்கும்
தென் கடல் சேர்ப்னொடு வாரான்
தான்வந் தனன்எம் காதலோனே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானலம் பெருந்துறைத் துணையொடு கொட்டும்
தன்னம் துறைவ கண்டிரும்
அம்மா மேனிஎம் தோழியது துயரே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
பசிதின அல்கும் பனிநீர்ச் சேர்ப்ப
நின் ஒன்று இரக்குவென் அல்லேன்
தந்தனை சென்மோ கொண்ட இவள் நலனே.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் தலையும் நோய்மிகும் துறைவ
பண்டையின் மிகப் பெரிது இனைஇ
முயங்கு மதிபெரும் மயங்கினன் பெரிதே.

கதை – 17

வெள்ளக் காக்கா

அழகான ஒரு கடல்கரை.

அந்தக் கடல்கரையில், ஒரு, சிறிய ஓடம் இருக்கு. அந்த ஓடத்தில் ஒரு, வெள்ளக் காக்கா கூடு கட்டியிருக்கு.

அந்தக் கடல் கரையில், ஒரு உப்பங்கழி இருக்கு. அந்த உப்பங்கழியில் "கெளிறு" மீன்கள் நெறைய்யா இருக்கு. இந்த வெள்ளக் காக்கா, அந்த உப்பங்கழியில், நீந்தி நீந்தி, அந்தக் கெளிறு மீன்களைப் பிடித்துத் தின்று கொண்டு இருக்கிறது. அந்த வெள்ளக் காக்கா அந்த உப்பங்கழியில்,வேகமாக நீந்தும் போது, அந்த உப்பங் கழியில் பூத்திருந்த அல்லிப் பூக்கள் மிதி பட்டுப் பாழாகிறது.

அந்த வெள்ளக் காக்கா, அந்த உப்பங்கழியில் நீந்தி நீந்தி, வேட்டையாடி வேட்டையாடி, கெளிறு மீன்களைப் பிடித்துத் தின்னுத் தின்னு, அதன் வயிறு நிறைந்து விட்டது. அது அங்கிருந்து பறந்து போய், ஒரு, கொன்றை மரத்தில் உட்காருகிறது. அது, அந்தக் கொன்றை மரத்தில், ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தது. அந்த வெள்ளக் காக்காய்க்கு, அந்தக் கொன்றை மரத்தில், நேரம் போகாமல் சலிப்பு ஏற்பட்டது.

அந்த வெள்ளக் காக்கா, அங்கிருந்து பறந்து போய், ஒரு, புன்னை மரத்தில் உட்கார்ந்திருக்கிறது. அந்தப் புன்னை மரம் இப்போதுதான் பூக்க ஆரம்பித்திருக்கிறது. புத்தம் புதிய அந்தப் பூக்கள், சரம் சரமாய், அழகாக, தொங்கிக் கொண்டு இருக்கிறது.

அந்த வெள்ளக் காக்கா, அந்தப் புன்னை மரத்தி லிருந்து, அந்தச் சிறிய ஓடத்திற்குப் போகிறது. அது, முட்டை இடுவதற்காக, கூட்டில் போய் படுத்துக் கொள் கிறது.

அம்மூவனார்
ஐங்குறுநூறு
(பாட்டு 167, 168, 169, 170)

(பாட்டு 167, 168, 169, 170)

"பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி இனக்கெடிலு ஆரும் துறைவன்
நல்குவன் போலக் கூறி
நல்கான் ஆயினும் தொல்கேள் அன்னே.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
துறைபடி அம்பி அகம்இணை ஈனும்
தன்னந் துறைவன் நல்கின்
ஒண்நுதல் அரிவை பால்ஆ ரும்மே.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
ஒள் இணர் ஞாழல் முனையின் பொதி அவிழ்
புன்னைஅம் பூஞ்சினைச் சேக்கும் துறைவன்
நெஞ்சத்து உண்மை அறிந்தும்
என்செயப் பசக்கும் தோழி கண்ணே.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி நெய்தல் சிதைக்கும் துறைவன்
நல்லன் என்றி ஆயின்
பல் இதழ் உண்கண் பசத்தல் மற்று எவனோ."

கதை – 18

நாரை

இது, தொண்டி நகரம்.

இந்தத் தொண்டி நகரம், ஒரு, துறைமுகப் பட்டணம்.

அழகான, இந்தப் பெரிய நகரத்தின், கடல்கரையில், ஒரு வயதான நாரை உட்கார்ந்து இருக்கிறது. இந்த நாரையால் பறக்க முடியவில்லை.

மீனவர்கள் கடலில் வலைவீசி, மீன் பிடித்துக் கொண்டு, இப்போதுதான் கரைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள், தோணியில் இருந்து, மீன்களை, கீழே, இறக்கி வைக்கிறார்கள். அவர்கள் அந்த மீன்களை, ஒரு அம்பாரமாகக் குவிக்கிறார்கள்.

இன்று, அவர்களுக்கு, நல்ல மீன் பாடு.

எல்லா மீன்களும், பெரிய பெரிய மீன்கள்.

எல்லா மீன்களும், கொழுத்த மீன்கள்.

வயதான அந்த நாரை, இந்தப் பெரிய மீன் குவியலில் இருந்து, ஒரு கொழுத்த மீனைத் திருடுவதற்காக, அது, நல்ல நேரத்தை எதிர் பார்த்துக் கொண்டு காத்திருக்கிறது.

அம்மூவனார்
ஐங்குறுநூறு
(பாட்டு 180)

(பாட்டு180)

"சிறுநனி வரைந்தன கொணமோ பெருநீர்
வலைஞர் தந்த கொழுமீன் வல்சிப்
பறைதபு முதுகுருகு இருக்கும்
துறைகெழு தொண்டி அன்ன இவள்நலனே."

கதை – 19

காதலி

ஒரு, சிறிய கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு பெரிய்ய கடல், இருக்கு.

அந்தப் பெரிய கடலின், கரையில், ஒரு சோலை இருக்கு.

அந்தச் சோலைக்குப் பக்கத்தில், உயரமான, ஒரு மணல் மேடு இருக்கு. அந்த மணல் மேட்டில், ஒரு இளம்பெண், அவள் தோழிகளோடு நின்று கொண்டிருக் கிறாள். அவள், அழகான, தழை ஆடை உடுத்தியிருக்கிறாள். அவள், முன் கைகளில், சங்கு வளையல்களை, நெருக்கமாக அணிந்திருக் கிறாள். அவள் கைகள் அசையும் போதெல்லாம், அந்த வளையல்கள் குலுங்கிக் குலுங்கி ஓசை எழுப்பிக் கொண்டிருக்கிறது. அவளுக்கு நீளமான கருங்கூந்தல். அவள், அழகான அந்தக் கருங்கூந்தலில் "பூ" வைத்திருக்கிறாள். அழகான அந்தப் பெண், ஒரு நண்டைக் கையில் வைத்துக் கொண்டு அதை ஆட்டி ஆட்டி விளையாடிக் கொண்டிருக் கிறாள். அவள், தேவலோகத்துக் கன்னிப் பெண்களை விடவும், அழகாக இருக்கிறாள்.

கடல் அலை, இரைச்சல் போட்டுக் கொண்டு கரைக்கு வந்து அந்த மணல் மேட்டைக் கட்டித் தழுவிச் செல்வதை அவள் பார்க்கிறாள். அவள், தலையைத் தாழ்த்திக் கொண்டு, குறுஞ்சிருப்பாணியாய்ச் சிரிக்கிறாள். அவளுக்கு வெட்கம்

வருகிறது. அவள், நீளமான தன் கூந்தலால் முகத்தை மறைத்துக் கொள்கிறாள்.
பொழுது, மறைந்து விட்டது.
இருட்டு, அந்த மணல் மேட்டை மூடுகிறது.
அவள் அங்கிருந்து வெளியேறுகிறாள். அவள் மெல்ல மெல்ல நடந்து அந்தச் சோலையில் நுழைகிறாள். அந்தச் சோலையில் இவளை எதிர் பார்த்துக் கொண்டு, காத்திருந்த இவள், காதலன், இவளை, அவன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்கிறான்.

அம்மூவனார்
ஐங்குறுநூறு
(பாட்டு 191, 197, 199)

(பாட்டு 191, 197, 199)

"கடல்கோடு செறிந்த வளையார் முன்கை
களிப்புத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்
கானல் ஞாழல் கவின்பெறு தலையள்
வரையர மகளிரின் அரியள்என்
நிரைஅரு நெஞ்சம் கொண்டுஔித் தோளே."

"இளக்குவளை தெளிர்ப்ப அலவன் ஆட்டி
முகம்புதை கதுப்பினள் இறைஞ்சி நின்றோளே
புலம்புகொள் மாலை மறைய
நலங்கேழ் ஆகம் நல்குவள் எனக்கே."

"கானல்அம் பெருந்துறைக் கலிதிரை திளைக்கும்
வான்உயர் நெடுமணல் ஏறி ஆனாது
கான்கம் வம்மோ தோழி
செறிவளை நெகிழ்ந்தோள் எறிகடல் நாடே."

கதை – 20

ஊற்றுத் தண்ணீர்

ஒரு, பெரிய கிராமம்.

அந்தக் கிராமத்தில், ஒரு, பெரிய வீடு.

ஒரு இளம்பெண், அந்த வீட்டில் இருக்கிறாள்.

அவள், ஒரு, வெளியூர் இளைஞனைக் காதலித்தாள்.

அவள், பெற்றோர்கள், அவள் காதலித்த அந்த இளைஞனுக்கே அவளை, திருமணம் செய்து கொடுத்தனர்.

அவள், புகுந்த வீட்டில் இருந்து, தாய் வீட்டுக்கு வந்திருக் கிறாள்.

அந்தத் தாய், மகளிடம் கேட்கிறாள்..

"என் செல்ல மவளே..உன் கணவன் ஊர்ல, குடிக்கற துக்கு, நல்லதண்ணியே கெடைக்காதே..நீ.. எப்படியம்மா சமாளிக்கிறாய்..?"

"அம்மா.."

"என் கணவர் ஊர்ல, ஒரு, சிறிய ஊற்று இருக்கு. அந்த ஊற்றில் கொஞ்சம் தான், தண்ணீர் இருக்கு. சறுகுகள், அந்தத் தண்ணீரை மூடிக் கொண்டிருக்கிறது. அந்தச் சறுகுகள் அழுகி, அந்தத் தண்ணீர் நாத்தம் நாறுது.அந்த ஊற்றில் மான்கள் இறங்கி தண்ணீர் குடிக்கின்றன. அந்த மான்கள், தண்ணீர் குடிக்கும் போது, அந்த ஊற்றுத் தண்ணீரைக் கலக்கி விடுகிறது. அந்த மான்கள் குடித்துவிட்டு மிச்சம் வைத்த, அந்த எச்சித் தண்ணீரைத்தான் நான் குடிக்கிறேன்.

"அம்மா.."

நீ..நம்ம வீட்டில் எனக்கு, பாலில் புதிய தேன் கலந்து தருவாய்..நீ..எனக்குத் தருகிற அந்தப் பாலை விடவும், இப்போது நான் என் கணவன் வீட்டில் குடிக்கிற அந்த ஊரணித் தண்ணீர், எனக்கு தேவ அமிர்தமாக இருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 203)

(பாட்டு 203)

"அன்னாய் வாழி வேண்டு அன்ன நம் படப்பைத்
தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவளைக் கூவல் கீழ்
மான் உண்டு எஞ்சிய கவிழி நீரே."

கதை–21

ஊர் காப்பாளர்

ஒரு, மலைக் கிராமம்.

அது, ரொம்ப, செழிப்பான கிராமம்.

அந்தக் கிராமத்தின், பாதுகாப்புக்கு, அரசனால், ஒரு, காவல் அதிகாரி, நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர், அந்தக் கிராமத்தின் முக்கியமான ஒரு பாதையில் நின்று கொண்டு, அவர் கடமையைச் செய்து கொண்டிருக்கிறார்.

மழை பெய்து கொண்டிருக்கிறது.

அந்தக் காவல் அதிகாரி, மழையில் நனைந்து கொண்டிருக்கிறார். அவர் தோளில், நீளமான ஒரு வாள், தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வாள்மேல் மழைத் துளிகள் விழுந்து, அது, தெறித்துஓடுகின்றன. அவர் கால்களில், தண்டை அணிந்திருக்கிறார். அது, பெரிய பெரிய,கனத்த தண்டைகள். அது பாசி பிடித்து, பச்சை நிறத்தில் இருக்கிறது. அவர் வேட்டியை, தார்பாய்ச்சிக் கட்டி இருக்கிறார். அந்த வேட்டி மழையில் நனைந்து தொப்பு தொப்புன்னு ஈரமாக இருக்கிறது.

அந்தக் காவல் அதிகாரி, விடாமல் பெய்கிற மழையில் நனைந்து கொண்டு தன் பணியை, கடமை தவறாமல் செய்து கொண்டிருக்கிறார்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 206)

(பாட்டு 206)

"அன்னாய் வாழி வேண்டு அன்ன உவக்கான்
மாரிக் குன்றத்துக் காப்பான் அன்னன்
தூவலின் நனைந்த தொடலை ஒள்வாள்
பாசி சூழ்ந்த பெருங்கழல்
தன் பணி வைகிய வரிக்கச் சினனே."

கதை-22

இப்பொழுது தான் பிறந்த ஒரு யானைக் குட்டி

ஒரு, பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், பெரிய பெரிய பலா மரங்கள், அடர்த்தியாய் இருக்கு. அந்தப் பலா மரங்களில், பெரிய பெரிய பலாப் பழங்கள், தொங்கிக் கொண்டிருக் கிறது. அந்தப் பலா மரங்களின் நிழல், இருட்டாருக்கு. அந்த இருட்டில், ஒரு ஆண் புலி, பதுங்கியிருக்கிறது. அது, பசியோடு இருக்கிறது, அது, இரையை எதிர்பார்த்துக் கொண்டு, காத்திருக்கிறது.

அந்தப் பெரிய காட்டில் அந்தப் பலா மரங்களின் நெடுகிலும், புற்கள் ஓங்கி வளர்ந்திருக்கிறது. ஒரு இளம் பெண் யானை, தன் குட்டியோடு அந்தப் புல்லுக் காட்டில், நடந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தக் குட்டி யானை, இப்பொழுதான் பிறந்து இருக்கிறது. அந்தக் குட்டி யானை யால் தாய் கூட நடக்க முடியவில்லை. அது, நடக்க முடி யாமல் தள்ளாடித் தள்ளாடி, லம்பி லம்பி வந்து கொண் டிருக்கிறது.

பலா மரங்களின் அடியில், இருட்டில் பதுங்கி இருந்த அந்த ஆண் புலி பாய்ந்து போய் அந்தக் குட்டி யானையைக் கடித்துக் கொன்று விட்டது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 216)

(பாட்டு 216)

"குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை
நெடும்புதல் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்குநடைக் குழவி கொளீஇய பலவின்
பழம் தூங்கு கொழுநிழல் ஒழிக்கும் நாடற்குக்
கொய்திடு தளிரின் வாடிநின்
மெய்பிறி தாதல் எவன்கொல் அன்னாய்."

கதை–23

ஒரு புலி முழங்குகிறது

ஒரு காடு.

அது, ரொம்பப் பெரிய காடு,

அந்தக் காட்டில், எங்கு பார்த்தாலும், பெரிய பெரிய, புதர்கள்.

ஒரு, பெரிய புதரில், ஒரு ஆண் புலி பதுங்கி இருக்கிறது. அது, ஒரு,ஆண் யானையைக் கொல்வதற்காக, அங்கே பதுங்கி இருக்கிறது.

யானைகளின் சொந்தப் பாதை, புலி பதுங்கி இருக்கிற, அந்தப் புதர் அருகில்தான் செல்கிறது. யானைக் கூட்டம், இந்த பாதையில்தான் வரும். யானைக் கூட்டத்திற்கு ஒரு பெரிய ஆண் யானை தலைமை தாங்கும். அந்தத் தலைவன் யானை, மற்ற எல்லா யானைகளுக்கும் முன்னால் வரும். அந்தப் புலி, இந்தத் தலைவன் யானையைக் கொல்வதற்குத்தான், அங்கே பதுங்கியிருக்கிறது.

அந்தப் புலி, அங்கே ரொம்ப நேரமாய்க் காத்திருந்தது.

யானைக் கூட்டமும் வரவில்லை. அந்தத் தலைவன் யானையும் வரவில்லை.

அந்தப் புலிக்குக் கோவம் வந்தது. படுத்திருந்த அந்த ஆண் புலி, எழுந்து நின்று கொண்டு ஆங்காரமாய் முழங்கியது.

அந்த முழக்கம் மழைக் காலத்தில், மழை மேகங்கள் முழங்குவதைப் போல பயங்கரமாக இருந்தது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 218)

(பாட்டு 218)

"நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும்
மயிர்வார் முன்கை வளையும் செலூஉம்
களிறுகோள் பிழைத்த கதஞ்சிறந்து எழுபுலி
எழுதரு மழையின் குழுமும்
பெருங்கல் நாடன் வருங்கொல் அன்னாய்."

கதை-24

ஒரு கன்னி ஆடு

ஒரு மலை.

அந்த மலையில், ஒரு பெரிய அருவி இருக்கு.

ஒரு ஆடு, அந்த அருவிக்குப் பக்கத்தில், நின்னுக் கிட்டுருக்கு. அதன் ரோமங்கள் மினுங்குகிறது.

அந்தக் கன்னி ஆடு, ஒரு செம்மறிக் கிடாயைக் காதலிக்கிறது.

அந்தச் செம்மறிக் கிடாய், ரொம்பப் பலசாலி. அந்தக் கிடாய்க்கு ரெண்டு கொம்பு இருக்கு. அந்தக் கொம்புகள் நீள மாக இருக்கு.

அந்தச் செம்மறிக் கிடாய், காதலியைப் பார்ப்பதற்கு, அருவிப் பக்கம் வரவே இல்லை. இந்த நிமிஷம் வரைக்கும் அது வல்ல.

அந்தக் கன்னி ஆடு நினைக்கிறது.

"என் காதலன், "என்னைப் பார்க்க, கட்டாயம் வருவான். அவன் என்னிடம் வருவதற்கு, இன்னும், எவ்வளவு நேரம் ஆனாலும் பரவாயில்லை. நான், அவனுக்காக, இங்கேயே காத்திருப்பேன்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 238)

(பாட்டு 238)

"வார்கோட்டு வயத்தகர் வாராது மாறினும்
குரூஉ மயிர்ப் புருவை நசையின் அல்கும்
மாஅல் அருவித் தண்பெருஞ் சிலம்ப
நீ இவன் வரூஉங் காலை
மேவரும் மாதோ இவள் நலனே தெய்யோ.-"

கதை–25

மதம்

ஒரு, பெரிய்ய, ஆண் யானையின் முகத்தில், மதநீர் வடிந்து கொண்டிருக்கிறது. வண்டுகள், அந்தப் பெரிய ஆண் யானையை, மொய்த்துக் கொண்டிருக்கிறது.

அந்த யானைக்கு முன்னால், ஒரு கல் இருக்கு. சொர சொரப்பான, ஒரு பெரிய, குண்டுக்கல். மதம் பிடித்த, அந்தப் பெரிய, ஆண் யானையின் கண்களுக்கு..அந்தப் பெரிய குண்டுக்கல், ஒரு, இளம் பெண்யானை, மாதிரித் தெரிகிறது. அந்தப் பெரிய ஆண் யானை அந்தப் பெரிய குண்டுக்கல்லை, வெறியோடு தழுவுகிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 239)

(பாட்டு 239)

"சுரும்புஉணக் களித்த புதர்முக வேழம்
இரும்பினர் துறுகல் பிடிசெத்துத் தழூஉம் நின்
குன்றுகெழு நல்நாட்டுச் சென்ற பின்றை
நேர்இறைப் பணைத்தோள் ஞெகிழ
வாராய் ஆயின் வாழேம் தெய்யோ."

கதை–26

பொம்மை

ஒரு, பெரிய காடு.

குறவர்கள், அந்தப் பெரிய காட்டில் தினை விதைத்திருக்கிறார்கள். தினைப் பயிர்கள், செழிப்பாக வளர்ந்து, சாட்டை சாட்டையாகக் கருது வாங்கிக் கொண்டு இருக்கிறது. அந்தத் தினைப் பயிர்களை, யானைகளும், பன்றிகளும், வந்து நாசம் பண்ணுகிறது.

குறவர்கள் இந்த யானைகளையும், பன்றிகளையும், கட்டுப்படுத்துவதற்கு, ஒரு, தந்திரம் செய்தார்கள்.

அவர்கள் பெண்புலி மாதிரி, ஒரு பொம்மை செய்தார்கள். அந்தப் பொம்மையின் கண்களுக்குக் "கழற்சிக்காய்" வைத்தார்கள், அந்தப் பொம்மை, கழற்சிக்காய்க் கண்களோடு, அசல் புலி மாதிரியே இருந்தது. அந்தக் குறவர்கள், அந்தப் பொம்மையை அவர்களுடைய தினைக் காட்டில் வைத்திருக்கிறார்கள்.

குறவர்களின் அந்தத் தினைக் காட்டுக்கு மேற்கே, ஒரு மலை, இருக்கிறது. பச்சைப் பசேல் என்று, மிளகுக் கொடிகள், அந்த மலையைச் சுற்றிப் பின்னிக் கிடக்கிறது. அந்த மலையில் ஒரு குகை இருக்கு. அந்தக் குகையில் ஒரு பெரிய ஆண் புலி தங்கியிருக்கிறது. அந்தப் புலி அந்தக் குறவர்களின் தினைக் காட்டுக்கு வந்திருக்கு. அந்தப் பெரிய ஆண் புலி, அந்தப் பொம்மைப் புலியைப் பார்க்கிறது.

அந்த ஆண் புலி அந்தப் பொம்மையை உண்மையான பெண் புலி என்று நினைக்கிறது. அந்தப் புலிக்கு அந்தப் பொம்மை மேல் காமம் ஏற்படுகிறது. அந்தப் பெரிய ஆண் புலி அந்தப் பொம்மையைப் புணர்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 246)

(பாட்டு 246)

"வெறி செறித் தனனே வேலன் கரிய
கல்முகை வயப்புலி கழங்கு மெய்ப் படூஉம்
புண்புலம் வித்திய புனைவர் புணர்த்த
மெய்ம்மை அன்ன பெண்பாற் புணர்ந்து
மன்றில் பையுள் தீரும்
குன்ற நாடன் உறீஇய நோயே."

கதை–27

மணம்

ஒரு சிறிய மலைக் கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில், ஒரு சிறிய குடிசை இருக்கு. அந்தக் குடிசைக்குப் பின்னால் ஒரு, பெரிய கொட்டாரம் இருக்கு. அந்தக் கொட்டாரத்தில், ஒரு சந்தன மரம் இருக்கு. அது, முற்றி, வைரம் பாய்ந்துயிருக்கிறது.

அந்தக் குடிசைக்குச் சொந்தக்காரன், ஒரு குறவன். அவன், அந்தச் சந்தன மரத்தை வாளால் அறுத்து அதைக் கீழே சாய்க்கிறான். அவன் அதைச் சிறு சிறு துண்டுகளாக அறுக் கிறான். அவன், அந்தத் துண்டுகளையெல்லாம், ஒரு அம்பார மாகக் குவிக்கிறான். அவன் அந்தச் சந்தனக் கட்டைகளுக்கு "தீ" வைக்கிறான்.

சந்தனக் கட்டைகள் "தீ" பிடித்து எரிகிறது.

சந்தனப் புகை உயரமாய், மேலே மேலே எழும்பு கிறது.

அந்த மலைக்குச் சொந்தமான காந்தள் செடிகள், அந்தச் சிறிய கிராமத்தில், எங்கெங்கும் பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கிறது. அந்தச் சந்தனப் புகை, அந்தக் காந்தள் பூக்களில் படிகிறது. சந்தனப் புகை படிந்த அந்தக் காந்தள் பூக்கள், சந்தன மணமாய் மணக்கிறது. காந்தள் பூக்களில்

சந்தன மணம் மணப்பதால், வண்டுகள், அந்தக் காந்தள் பூக்களை மொய்க்கின்றன.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 254)

(பாட்டு 254)

"குன்றக் குறவன் ஆரம் அறுத்தென
நறும்புகை சூழ்ந்து காந்தள் நாறும்
வண்டுஇமிர் சுடர்நுதல் குறுமகள்
கொண்டனர் செல்வர்தம் குன்றுகெழு நாட்டே".

கதை-28

கடைக் குட்டிப் பெண்

ஒரு, சிறிய, மலைக்கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு சிறிய குடிசை.

அந்தச் சிறிய குடிசையில், ஒரு இளம்பெண் இருக்கிறாள், அவள் அந்தக் குடும்பத்தில், கடைசியாகப் பிறந்த கடைக் குட்டிப் பெண்

அவளுக்குச் சின்ன நெற்றி. சிவந்த உதடுகள், நீண்ட கண்கள், சின்னச் சின்னப் பிஞ்சு முலைகள். அந்தச் சின்னஞ் சிறு பிஞ்சு முலைகளைத் தேமல்கள் அலங்கரித்துக் கொண்டு இருக்கிறது.

அவள், கைகளில், வளையல்கள் அணிந்திருக்கிறாள். தலையில் "பூ" வைத்திருக்கிறாள். இடுப்பில் தழை ஆடை உடுத்தி இருக்கிறாள். அந்த, இளம்பெண், தேவலோகத்துக் கன்னி மாதிரி பேரழகோடு இருக்கிறாள்.

அவள், மயில் மாதிரி, அசைந்து அசைந்து, மெல்ல மெல்ல, நடந்து நடந்து, அவள் குல தெய்வம் வாழும் மலைக் கோயில் முன் வந்து நிற்கிறாள். அவள், கடவுளை, தேன் ஊற்றிக் குளிப்பாட்டுகிறாள். வேங்கைப் பூக்களால் கடவுளை அலங்காரம் பண்ணுகிறாள். அவள் கைகள், ஈரமாக இருக்கிறது. அவள் ஈரமான தன்கைகளைக் கூப்பி, கடவுளை வணங்கி, கடவுளிடம் ஒரு வரம் கேட்கிறாள்.

"எங்கள் குல தெய்வமே..நீதான், என் காதலனை, எனக்கு, அடையாளம் காட்டினாய். நீ..எனக்கு..அடையாளம் காட்டிய என் காதலனை, நான், என் உயிருக்கும் மேலாகக் காதலிக்கிறேன். அவனில்லாமல், என்னால் வாழ முடியாது. என் காதலனை, நீதான், எனக்குத் திருமணம் செய்து வைக்க வேண்டும்."

அவள், மன்றாடி மன்றாடி கடவுளிடம் வரம் கேட்டுக் கொண்டிருந்த போது, அவள் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

கபிலர்

ஐங்குறுநூறு

(பாட்டு 255 - முதல் 259 முடிய)

(பாட்டு 255 - முதல் 259 முடிய)

"குன்றக் குறவன் காதல் மடமகள்
வரையற மகளிர்ப் புரையும் சாயவள்
ஐயள் அரும்பிய முலையள்
செய்ய வாயினள் மார்பினள் சுணங்கே.

குன்றக் குறவன் காதல் மடமகள்
வண்டுபடு கூந்தல் தண்தழைக் கொடிச்சி
வளையல் முளைவாள் எயிற்றல்
இளையல் ஆயினும் ஆரணங் கினளே.

குன்றக் குறவன் கடவுட் பேணி
இரந்தனன் பெற்ற எல்வளைக் குறுமகள்
ஆய்அரி நெடுங்கண் கவிழ
சேயதால் தெய்ய நீபிரியும் நாடே.

குன்றக் குறவன் காதல் மடமகள்
அணிமயில் அன்ன இசைநடைக் கொடிச்சியைப்
பெறுவரை நாடன் வரையுமாயின்
கொடுத்தனெம் ஆயினோ நன்றே
இன்னும் ஆனாது நன்னுதல் துயரே.

குன்றக் குறவன் காதல் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலை உறைக் கடவுள் குல முதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த ஈர்தலும் கையள்
மலர்ந்த காந்தள் நாறிக்
கவிழ்ந்த கண்ணள்எம் அணங்கி யோளே."

கதை-29

தாய் இல்லாப் பிள்ளை

ஒரு, மலை.

அது, ரொம்ப்ப, உயரமான மலை.

அந்த மலை உச்சியில், குறவர்கள் வாழ்கிறார்கள்.

அந்த மலையில், தினை விளைந்து, வளம் கொழிக் கிறது.

அந்த மலையில், ஒரு ஆண் பன்றி, படுத்திருக்கிறது. அது, தனக்கு பக்கத்தில், தன் குட்டியைப் படுக்க வைத்துக் கொண்டு, உறங்கி கொண்டு இருக்கிறது. அந்த ஆண் பன்றிக்கு, ரெண்டு கொம்பு இருக்கு. அந்த ரெண்டு கொம்புகளும் வளைஞ்சிக்கிட்டு இருக்கு. அந்தக் கொம் புகள், வெள்ளை வெளேர்னு அழகா இருக்கு. அந்தக் குட்டியின் உடம்பில் நெருக்கமாகக் கோடுகள் இருக்கு. அந்தப் பன்றிக் குட்டிக்கு, நெருக்கமான அந்தக் கோடுகள் அழகா இருக்கு.

நேற்று, அந்த ஆண் பன்றி, தன் சிறிய குட்டியையும், தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு, மேயப் போயிருந்தது. அந்தப் பன்றிகள் இரை மேய்ந்து விட்டு, திரும்பி வந்து கொண்டிருந்தது. அப்போது, ஒரு புலி, அந்தப் பன்றிக் குட்டியின் தாயைக் கடித்துக் கொன்று விட்டது.

இந்த அப்பா பன்றிதான், தாயில்லாத இந்தப் பிள்ளையை, வளர்க்கிறது.

கபிலர்

ஐங்குறுநூறு

(பாட்டு 265 - 268)

(பாட்டு 265 - 268)

"புலிகொல் பெண்பால் பூவரிக் குருளை
வளைவென் மருப்பின் கேழல் புரக்கும்
குன்றுகெழு நாடன் மறந்தனன்
பொன்போல் புதல்வனோடு என்நீத் தோனே"

"தாஅய் இழந்த தழுவரிக் குருளையொடு
வளமலைச் சிறுதினை உணீஇ கானவர்
வரை ஓங்கு உயர்சிமைக் கேழல் உறங்கும்
நல்மலை நாடன் பிரிதல்
என்பயக் கும்மோ நம்விட்டுத் துறந்தே."

கதை-30

ஒரு பெண் குரங்கு

உயரமான, ஒரு, பெரிய, மலை.

அந்த மலை உச்சியில், ஒரு, சந்தன மரம் இருக்கு. அந்தச் சந்தன மரத்தில், ஒரு பெரிய, தேன்கூடு இருக்கு.

அந்த மலையில், ஒரு, பெண் குரங்கு இருக்கு. அந்தப் பெண் குரங்கின் கால்கள், கரேர்னு, கருப்பா இருக்கு. அதுக்கு, ஒரு, பெரிய, குட்டி இருக்கு, அந்தப் பெரிய குட்டிக்கு, அதன் வயித்துக்குக் கூட, இரை தேடத் தெரியல. அது, எப்பமும், தாய் மடியிலேயே உட்காந்துகிட்டிருக்கு.

அந்தப் பெண் குரங்குக்கு, அந்த மலை உச்சியில் இருக்கிற, பெரிய, தேன் கூட்டில் இருந்து, தேன் எடுத்துக் குடிக்கணும் என்று ஆசை. அது, தன், பெரிய குட்டியையும் சுமந்து கொண்டு, ஏறுவதற்குக் கடினமான அந்த மலைமேல் ஏறி ஏறி உச்சிக்கு வந்து விட்டது. அந்தப் பெரிய தேன் கூட்டுக்குப் பக்கத்தில் போய் அது, உட்கார்ந்தது. அது, ஆவலோடு, அந்தத் தேன் கூட்டில் கையை வைத்தது. அந்தப் பெரிய தேன் கூட்டில் இருந்த தேனீக்கள் தங்கள் கூட்டில் கைவைத்த, அந்தப் பெண் குரங்கை, கோபத்தோடு கொட்டியது. அந்தப் பெண் குரங்கால், அந்த விஷக்கடியைத் தாங்க முடிய வில்லை. அது, அங்கிருந்து ஓடியது, அது ஓட ஓட, அந்தத் தேனீக்கள் அதைத் துரத்தித் துரத்திக் கொட்டியது. தேனீக்களின் கடியிலிருந்து தப்பிக்க நினைத்த அந்தப் பெண்

குரங்கு, பாதாளத்திற்குப் போய்விடலாம் என்று எண்ணியது. அது, அங்கிருந்து பாதாளத்தை எட்டிப் பார்த்தது. பாதாளத்தில், ஒரு, பெரிய, மரம் இருந்தது. அந்த மரத்தில், நீளமான ஒரு கிளை இருந்தது. அந்தப் பெண் குரங்கு அந்த நீளமான கிளையைக் குறிவைத்துப் பாய்ந்தது. அது, தன், குட்டியோடு உயரமான அந்த மலை உச்சியில் இருந்து, பாதாளத்தை நோக்கி, கீழே விழுந்து கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 272)

(பாட்டு 272)

"கருவிரல் மந்திக் கல்லா வன்பறழ்
அருவரைத் தீந்தேன் எடுப்பி அயலது
உருகெழு நெடுஞ்சினைப் பாயும் நாடன்
இரவில் வருதல் அறியான்
வரும் வரும் என்ப தோழி யாயே."

கதை–31

கோழை

ஒரு மலை.

அந்த மலையில், ஒரு பெண் குரங்கு இருக்கு. அந்தப் பெண் குரங்குக்கு, ஒரு கணவன் இருக்கிறான். அவன், ஒரு, கோழை.

அந்த மலையில், ஒரு, ஆண் புலியும் இருக்கு. வலிமையான, அந்த,, ஆண் புலியின் தோற்றம், கம்பீர மானது. அது முழங்குகிறது. அது முழங்கும் போது, இந்தப் பூமி அதிர்கிறது.

புலியின் முழக்கத்தைக் கேட்ட அந்தப் பெண் குரங்கின் கணவனுக்கு, உடம்பு நடுங்குகிறது. அது, எங்காவது ஓடிப் போய், ஒளிந்து கொள்ள வேண்டும், என்று நினைக்கிறது. அது, ஒளிந்து கொள்வதற்காக அந்த மலையில் ஏறி, உச்சிக்குப் போய்க் கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 274)

(பாட்டு 275)

மந்திக் கணவன் கல்லாக் கடுவன்
ஒண்கேள் பயப்புலி குழுமலின் விறைந்துடன்
குன்றுயர் அடுக்கம் கொள்ளும் நாடன்
சென்றனன் வாழி தோழி என்.
மென்தோட் கவினும் பாயலும் கொண்டே."

கதை-32

நீர்க் குமிழி

ஒரு, பெரிய பாறை.

அது, ரொம்ப, அகலமான பாறை.

அந்தப் பாறையில், ஒரு, கிடங்கு இருக்கு. அதில், மழைத் தண்ணீர் கெட்டிக் கெடக்கு. அந்தத் தண்ணீரில், நீர் மட்டத்துக்கு மேலே நீர்க் குமிழிகள் புடைத்துக் கொண்டிருக் கின்றன.

அந்தப் பெரிய பாறையில், ஒரு, ஆண் குரங்கு இருக்கு. இந்த, ஆண் குரங்கு, குரங்குகளுக்கு எல்லாம் தலைவன். அவன், அழகேந்திரன். அவன் ரோமங்கள், பள பளன்னு, மினுங்கிக் கொண்டிருக்கிறது. அவன், ஒரு, பிரம்பு வைத்திருக்கிறான். அவன், அந்தத் தண்ணீரில் புடைக்கிற நீர்க் குமிழிகளை, அந்தப் பிரம்பால் அடித்து விளையாடிக் கொண்டிருக்கிறான்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 275)

(பாட்டு 275)

"குரங்கின் தலைவன் குரூஉ மயிர்க் கடுவன்
குரல்அம் சிறுகோல் கொண்டு வியல் அறை
மாரி மொக்குள் புடைக்கும் நாட
யாம்நின் நயந்தனம் எனினும்எம்
ஆய்நலம் வாடுமோ அருளுதி எனினே."

கதை-33

மழை மேகங்கள்

ஒரு, பாறை,

அது, ரொம்பப் பெரிய பாறை.

அந்தப் பெரிய பாறையில், ஒரு ஆண் குரங்கு இருக்கு. அது, அந்தப் பாறையில் எப்போதும் கிடைக்கக் கூடிய, மரம் செடி கொடிகளின் இளம் தளிர்களைத் தின்று வாழ்ந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய பாறையில், திடீரென்று மழை மேகங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கிறது. அந்த மழை மேகங்கள், அந்த ஆண் குரங்கின் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தப் பாறையில், பச்சைப் பசேல் என்று, நரைக் கொடிகள் கொடி வீசிப் படர்ந்திருக்கிறது. அந்த ஆண் குரங்கு, அந்த நரைக் கொடியை அத்து எடுக்கிறது. அது, தன் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கிற மழை மேகங் களை, அந்த நரைக் கொடியால் அடித்து அடித்து விளை யாடிக் கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 276)

(பாட்டு 276)

"மந்திக் காதலன் முறிமேய் கடுவன்
தண்கமழ் நரைக்கொடி கொண்டு வியல்அறைப்
பொங்கல் இளமழை புடைக்கும் நாட
நயவாய் ஆயினும் வரைந்தனை சென்மோ
கல்முகை வேங்கை மலரும்
நல்மலை நாடன் பெண்டுஎனப் படுத்தே."

கதை–34

குண்டுக்கல்

ஒரு, மலைக் கிராமம்,

அந்த மலைக் கிராமத்தில், ஒரு பெரிய தெரு இருக்கு. அந்தப் பெரிய தெருவில், ஒரு, குடிசை. அந்தக் குடிசைக்கு முன்னால், ஒரு, குண்டுக்கல் இருக்கு. அது, சொர சொரப்பான, ஒரு, பெரிய கல்.

ஆடுகளும் மாடுகளும், உடம்பில் தினவு எடுக்கும் போது, அந்தக் குண்டுக்கல்லில் உராய்ந்து, தங்கள் தினவைப் போக்கி கொள்ளும்.

அப்படியாப்பட்ட, அந்தப் பெரிய குண்டுக்கல்லில், ஒரு இளம் பெண் குரங்கு, தன் காதலனோடு, ஆனந்தமாய் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டு இருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 277)

(பாட்டு 277)

"குறவர் முன்றில் மாதீண்டு துறுகல்
கல்லா மந்தி கடுவனோடு உகளும்
குன்றநாட நின் மொழிவல் என்றும்
பயப்ப நீத்தல் என்இவள்
கயத்துவளர் குவளையின் அமர்த்த கண்ணே."

கதை-35

எங்கள் ஊர்

இது, எங்கள் மலை,

எங்கள் மலை உச்சியில் இருக்கிறது எங்கள் ஊர்.

எங்கள் மலையில், ஒரு இத்தி மரம் இருக்கு.

அது, எங்கள் மலையில் அழகாக வேர்விட்டுக் கொண்டு, அது எங்கள் மலையில் பல்லாண்டு, பல்லாண்டு கள் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த இத்தி மரத்தில், இரண்டு குரங்குகள் இருக்கு. இவர்கள் கணவனும் மனைவியும். இந்தக் குரங்குகள், இத்தி மரமே கதி என்று காலம் பூராவும் இத்தி மரத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த இளம் தம்பதிகள், எங்கள் மலையில் கிடைக்கக் கூடிய காட்டு மல்லிச் செடிகளின் இலைகளைத் தின்று கொண்டு ஆனந்தமாய் துள்ளிக் குதித்து விளையாடிக் கொண்டு இருக்கிறது பாருங்களேன்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 279)

(பாட்டு 279)

"கல்இவர் இற்றி புல்லுவன ஏறிக்
குளவி மேய்ந்த மந்தி துணையொடு
வரைமிசை உகளும் நாட நீவரின்
கல்அகத் ததுஎம் ஊரே
அம்பல் சேரி அலர்ஆங் கட்டே."

கதை–36

கிளி

அறுவடை முடிந்த, ஒரு, காடு. அந்தக் காட்டில், தட்டைகள் மட்டும், நின்று கொண்டிருக்கிறது. அந்தத் தட்டைகளில், ஈரப்பதமே இல்லை. காஞ்சி கெடக்கு, அந்தக் காடு.

அந்தக் காட்டுக்கு, ஒரு கிளி வந்துருக்கு. அந்தக் கிளிக்கு, வாய் செகப்பாருக்கு. அதன் ரோமங்கள் பச்சை நிறத்தில், அழகாருக்கு. அது, ஒரு, அழகான பறவை.

அந்தக் காட்டில், அந்தக் கிளிக்கு இரை கெடைக்கல. அது, இரை கெடைக்காட்டாலும், அது, அந்தக் காட்டை விட்டு வேறு எங்கும் போகப் பிரியப் படல. அந்தக் காட்டிலேயே, பசியோடும், தாகத்தோடும் உக்காந்துக்கிட்டிருக்கு. அழகான அந்தக் கிளியைப் பார்க்கிறதுக்கு, ரொம்பப் பாவமா இருக்கு.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 284)

(பாட்டு 284)

"அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள் புனம் கண்டும்
பிரிதல் தேற்றாய் பேரன் பினவே."

கதை-37

தினை மாவு

ஒரு, மலைக் கிராமம்,

அந்த மலைக் கிராமத்தில், ஒரு, பெரிய வயல்.

அந்த வயலில், வெள்ளை நெல், வெதைச்சிருக்கு, நெல்-பயிர்கள் வளர்ந்து, கருது வாங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த வயலில், உயரமான ஒரு பரண் இருக்கு. அந்நப் பரணில், ஒரு, இளம்பெண், காவலுக்கு உக்காந்திருக்கிறாள். அவள் கைகளில், ஏராளமான வளையல்கள் அணிந்திருக் கிறாள். அவளுக்கு நீளமான கூந்தல். அவள், கூந்தலை வாரி, பின்னி, சடை போட்டிருக்கிறாள். அவளுடைய அழகான சின்ன நெற்றி, ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அழகான அந்த இளம்பெண்ணுக்கு அருகில், ஒரு இளைஞன் உட்கார்நதிருக்கிறான். அவன், கிளிகளை விரட்டும் கருவிகளைக் கொண்டு, கிளிகளை விரட்டிக் கொண்டிருக்கிறான். அந்த இளைஞனை, அந்த இளம்பெண் உயிருக்கும் மேலாகக் காதலிக்கிறாள்.அவள், வீட்டிலிருந்து கொண்டு வந்திருந்த தினைமாவை, அந்த இளைஞனுக்கு, காதலோடு ஊட்டிக் கொண்டிருக்கிறாள்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 285)

(பாட்டு 285)

"பின்இரும் கூந்தல் நல்நுதல் குறமகள்
மென்தினை நுவணை உண்டு தட்டையின்
ஐவனச் சிறுகிளி கடியும் நாட
வீங்குவளை நெகிழப் பிரிதல்
யாங்கு வல்லுநையோ ஈங்குஇவள் துறந்தே."

கதை-38

அவரைச் செடிகள்

ஒரு, மலைக் கிராமம்.

அந்த மலைக் கிராமத்தில் வாழும் குறவர்கள், மழைக் காலத்தில், காடுகளில், தினை விதைத்தார்கள். அவர்கள், தினை விதைக்கும் போது, தினையோடு கலந்து, அவரை விதைகளையும் விதைத்தார்கள்.

காடுகளில், தினைக் கருதுகள், அறுவடையாகி விட்டது. அறுவடையான அந்தக் காடுகளில், தினைத் தட்டை கள், நின்று கொண்டிருக்கிறது. அந்தத் தட்டைகளை, அவரைச் செடிகள், பின்னிக் கொண்டிருக்கிறது. அந்த அவரைச் செடிகளில், காய்கள், சரம் சரமாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கோடையில், குறவர்களுக்கு, இந்த அவரை, வளமான, புதிய வருமானம். இந்தக் கோடையில் கிளிகளுக்கு இந்த அவரை, வளமான, உணவு.

கிளிகள், எங்கு எங்கிருந்தெல்லாமோ, படைபடை யாக, இங்கே, வந்து கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 286)

(பாட்டு 286)

"சிறுதினை கொய்த இருவி வெண்கால்
காய்த்த அவரைப் படுகிளி கடியும்
யாணர் ஆகிய நன்மலை நாடன்
புகர் இன்று நயந்தனன் போலும்
கவரும் தோழிஎன் மாமைக் கவினே."

கதை-39

வருடை மான்கள்

ஒரு, மலை.

அது, ரொம்பப, நீளமான மலை.

அந்த மலையில், கூட்டம் கூட்டமா, மான்கள், வாழ் கின்றன. இது, வருடை மான்கள். மான்களில் இது, ஒரு, ரகம். இந்த மான்களுக்குக் கால்கள் குட்டையாக இருக் கிறது.

அந்த மலையில், குறவர்கள், தினை விதைத்திருக் கிறார்கள். தினைப் பயிர்கள் கருது வாங்கிக் கொண்டிருக் கிறது. இந்தத், தினைக் கருதுகளைத் திங்க, கிளிகள், கூட்டம் கூட்டமாக, இங்கே வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கிளிகள், இந்த மலையில் வாழும் வருடை மான்களைப் பார்த்ததும், பயந்து போய், தினைக் கருதுகளைத் தின்னாமல், திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 287)

(பாட்டு 287)

"நெடுவரை மிசையது குறுங்கால் வருடை
தினையாய் கிள்ளை வெரூஉம் நாட
வல்லை மன்ற பொய்த்தல்
வல்லாய் மன்ற நீஅல்லது செயவே."

கதை-40

மழலை மொழி

ஒரு, மலை.

ஒரு குறவன், அந்த மலையில், தினை விதைத்திருக்கிறான். தினைப் பயிர்கள், கருது வாங்கிக் கொண்டிருக்கிறது. எங்கிருந்தெல்லாமோ கிளிகள், அந்தத் தினைக் காட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது.

அந்தத் தினைக் காட்டில், உயரமான ஒரு பரண் இருக்கு. அந்தப் பரணில், ஒருபெண் உட்கார்ந்திருக்கிறாள். அவளுக்கு மழழைக் குரல்..அவள் பேசுவது, கிளி பேசுவது மாதிரியே இருக்கிறது.

அவள் "போ போ" என்று கிளிகளைத் துரத்திக் கொண்டிருக்கிறாள்.

அவள் குரல் "வா வா" என்று கூப்பிடுவதைப் போல், கிளிகளுக்குக் கேட்கிறது.

"நம்ம சொந்தக்காரக் கிளிதான், நம்மளை, வா வா," என்று, கூப்பிடுகிறது என்று, நினைத்துக் கொண்டு, கிளிகள், எங்கு எங்கிருந்தெல்லாமோ, அந்தத் தினைக் காட்டுக்கு வந்து கொண்டிருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 289)

(பாட்டு 289)

"கொடிச்சி இன்குரல் கிளிசெத்து அடுக்கத்துப்
பைங்குரல் ஏனல் படர்தரும் கிளிஎனக்
காவலுங் கடியுநர் போல்வர்
மால்வரை நாட வரைந்தனை கொண்மோ."

கதை-41

என் காதலி வாழும் நல்ல ஊர்

ஒரு, சிறிய, மலைக் கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில், எல்லா வீடுகளும், சின்னச் சின்னக் குடிசைகள்தான்.

ஒரு குடிசைக்கு முன்னால், ஒரு, பெரிய, குண்டுக் கல் இருக்கு. அந்தக் குண்டுக்கல்லுக்கு முன்னால், அழகான ஒரு ஆண் மயில், நின்று கொண்டிருக்கிறது. அது, அழகான தன் தோகையை விரித்து, அழகாக ஆடிக் கொண்டிருக்கிறது.

ஒரு, பேராந்தை, அந்த மயிலுக்கு நேர் எதிரில், ஒரு, பெரிய, குண்டுக்கல்லின் மேல், நின்று கொண்டிருக் கிறது.

அது, மயில் ஆடுவதைப் பார்க்கிறது. அந்த ஆந்தையால், அந்த மயில் ஆடுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. அந்த ஆந்தை, அந்த மயில் ஆடுவதற்குத் தகுந்தபடி பாட்டுப் பாடுகிறது.

அப்படியாப்பட்ட ஒரு நல்ல ஊரில், என் காதலி வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 291)

(பாட்டு 291)

“மயில்கள் ஆலக் குடிஞை இரட்டும்
துறுகல் அடுக்கத் ததுவே பணைத்தோள்
ஆய்தழை நுடங்கும் அல்குல்
காதலி உறையும் நனிநல் ஊரே.”

கதை-42

தீ

ஒரு, கோடை.

அந்தக் கோடையில், குறவர்கள், ஒரு கன்னி நிலத்தை, விளை நிலமாக மாற்றுவதற்கு, அந்தக் கன்னி நிலத்தை, சீர் திருத்தம் செய்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள், முதலில், காய்ந்த புதர்களையும், காய்ந்த முள் மரங்களையும் வெட்டினார்கள். அவர்கள் அந்த விறகு களைஅள்ளி, ஒரே இடத்தில் குவித்தார்கள். அப்புறம் அவர்கள், பசுமையான, பச்சை முள் மரங்களை வெட்டி, அதையும் அள்ளிக் கொண்டு போய் ஒரே அம்பாரமாக் குவித்தார்கள்.

அந்தக் குறவர்கள், அந்தப் பெரிய அம்பாரத்துக்குத் "தீ" வைத்தார்கள்.

தீ எரிகிறது.

அந்தத் தீயில் இருந்து எழும்புகிற புகை, வானத்தை மறைக்கிறது. அந்தத் தீயில் இருந்து வெளியேறுகிற அனல், அந்தப் பெரிய காடு எங்கும் பரவுகிறது.

அந்தப் பெரிய காட்டில், இரை மேய்ந்து கொண் டிருந்த மயில்கள், அணையாமல் எரிந்து கொண்டிருக்கிற தீயையும், அந்தத் தீயில் இருந்து வெளியே வருகிற அனலையும், வானத்தை மறைக்கிற புகையையும் பார்க்கிறது.

அந்த மயில்கள் உயிருக்குப் பயந்து, அந்தப் பெரிய

காட்டில் இருந்து வேகமாக வெளியேறுகின்றன.

கபிலர்

ஐங்குறுநூறு

(பாட்டு 295 - ல் கதை ஒன்று)

(பாட்டு 295 - ல் கதை ஒன்று)

"வருவது கொல்லோ தானே வாராது
அவண்உறை மேவலின் அமைவது கொல்லோ
புனவர் கொள்ளியின் புகல்வரு மஞ்ஞை
இருவி இருந்த குருவி வருந்துற
பந்து ஆடு மகளிரின் படர்தரும்
குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே."

கதை–43

குருவி

தினை, அறுவடை முடிந்த ஒரு காட்டில், தினைத் தட்டைகள் மட்டும், நின்று கொண்டிருக்கிறது. அந்தத் தட்டைக் காட்டில், ஒரு குருவி, ஒரு தட்டையில் உட்கார முயன்று கொண்டிருக்கிறது. அந்தக் குருவியால் தட்டையில் உட்கார முடியவில்லை. அது, கீழே விழுகிறது, கீழே விழுந்த அந்தக் குருவி, தன் சிறகுகளை அகலமாக விரித்துக் கொண்டு, மேலே பறந்து வந்து, அந்தத் தட்டையில், மறுபடியும் உட்காருகிறது. இப்பமும் உட்கார முடியாமல், அது, கீழே விழுகிறது.

அந்தக் குருவி, அந்தத் தட்டைக் காட்டில் உட்கார்ந்து, இளைப்பாற முடியாமல் வருத்தத்தோடு இருக்கிறது.

கபிலர்
ஐங்குறுநூறு
(பாட்டு 295-ல் கதை இரண்டு)

(பாட்டு 295)

"வருவது கொல்லோ தானே வாராது
அவண்உறை மேவலின் அமைவது கொல்லோ
புனவர் கொள்ளியின் புகல்வரு மஞ்ஞை
இருவி இருந்த குருவி வருந்துற
பந்து ஆடு மகளிரின் படர்தரும்
குன்றுகெழு நாடனொடு சென்றஎன் நெஞ்சே."

கதை-44

இலவம் பூக்கள்

ஒரு பாலைவனத்தில், வழிப் போக்கர்கள், கூட்டமாய் நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நடக்க நடக்க அந்த வழி, அவர்களுக்கு முன்னால் நீண்டு கொண்டே போகிறது.

வெயில் சுட்டெரிக்கிறது.

அந்த வழிப் போக்கர்களுக்கு, தலை, வெடித்து விடும்போல இருக்கிறது.

அவர்களுக்கு முன்னால், ஒரு பெரிய இலவ மரம் இருக்கிறது. அது, வெள்ளை வெளேர் என்று, கொத்துக் கொத்தாகப் பூத்துக் கொண்டிருக்கிறது.

ஒரு இளைஞன், அந்த மரத்தில் ஏறி, பூக்களைப் பறிக்கிறான்.

அந்த வழிப் போக்கர்கள் அந்த இலவம் பூக்களை தலையில் வைத்துக் கொண்டு, நடக்கிறார்கள். அவர்கள், அந்த இலவம் பூக்களின் குளிர்ச்சியால்,வெயிலின் கடுமை தெரியாமல், நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 301)

(பாட்டு 301)

"மால்வெள் ளோத்திரத்து மைஇல் வால்இணர்
அருஞ்சுரம் செல்வோர் சென்னிக் கூட்டும்
அவ்வரை இறக்குவை யாயின்
மைவர நாட வருந்துவள் பெரிதே."

கதை-45

ஆலமரம்

ஒரு, பெரிய, ஆலமரம்.

அந்த ஆலமரம் பழுத்து இருக்கிறது. அந்தப் பழங்கள் புதிய மண்பானையின் நிறம் மாதிரி, செக்கச் செவேர்னு செகப்பா இருக்கு.

அந்தப் பழுத்த மரத்துக்கு, வெளியூர்களிலிருந்து, போகில் பறவைகள் வந்திருக்கு. அந்தப் பறவைகள்அந்த ஆலமரத்தின் பழங்களை விரும்பித் தின்கின்றன.

அந்தப் பெரிய ஆலமரம் தன்னிடம் இருக்கிற இனிப்பான பழங்களை அந்தப் பறவைகளுக்கு, செழிக்க செழிக்க திங்கக் கொடுத்து, அந்தப் போகில் பறவைகளை, அவைகளின் சொந்த ஊருக்குப் போகவிடாமல் தன்னிடத் திலேயே தங்க வைத்துக் கொண்டிருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 303)

(பாட்டு 303)

"புதுக்கலத்து அன்ன கனிய ஆலம்
போகில்தனைத் தடுக்கும் வேனில் அருஞ்சுரம்
தண்ணிய இனிய ஆக
எம்மொடும் சென்மோ விடலை நீயே."

கதை-46

கிடங்கு

ஒரு, மேய்ச்சல் நிலம்.

அந்த மேய்ச்சல் நிலத்தில், மாடுகள் தண்ணீர் குடிக்கிறதுக்கு அங்கே தண்ணீர் இல்லை.

இடையர்கள், அந்த மேய்ச்சல் நிலத்தில், ஒரு கிடங்கு தோண்ட தீர்மானித்தார்கள். அவர்கள், மாடு மேய்க்க, கையில் வைத்திருக்கும் கம்பால், கிடங்கைத் தோண்டினார்கள். அவர்கள், அவ்வளவு விவரமானவர்கள் இல்லை. அவர்கள் விவரமானவர் களாக இருந்திருந்தால், கடப்பாரை, மண் வெட்டியால் தோண்டி, அந்த வேலையைச் சீக்கிரமே முடித்திருப்பார்கள். அவர்கள், மாடு மேய்க்கும் கம்பைக் கொண்டு தோண்டியதால், அந்தக் கிடங்கைத் தோண்டி முடிக்க. அவர்களுக்கு வெகு காலம் பிடித்தது.

அவர்கள் தோண்டிய அந்தக் கிடங்கில், தண்ணீர் கெட்டிக் கிடக்கிறது. அதில், மாடுகள் தண்ணீர் குடித்துத் தாகம் தீர்த்துக் கொள்கின்றன.

ஒருநாள், அந்தக் கிடங்கில், மாடுகள்தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தபோது, அந்தக் கிடங்குக்கு, ஒரு பெரிய ஆண் யானை வந்தது. அது, அந்தக்கிடங்கில் கிடந்த தண்ணீரை யெல்லாம் உறிஞ்சிக் குடித்து விட்டது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 304)

(பாட்டு 304)

"கல்லாக் கோவலர் கோலில் தோண்டிய
ஆன்நீர்ப் பத்தல் யானை வெளவும்
கல்அதர்க் கவலை செல்லின் மெல்லியல்
புயல்நெடுங் கூந்தல் புலம்பும்
வயமான் தோன்றல் வல்லா தீமே."

கதை–47

தாய் மண்

பசுமையான, ஒரு, பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், யானைகள், பசி அறியாமல், கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்தது. ஆண் யானைகள், தங்களின் இளம் மனைவியரைப் புணர்ந்து, மகிழ்ச்சியோடு, அந்தக் காட்டில் வலம் வந்து கொண்டிருந்தது.

கோடை வந்தது.

வெயில், கொளுத்து கொளுத்து என்று கொளுத்தியது.

பச்சைப் பசேல் என்று, பசுமையாக இருந்த அந்தக் காட்டில், செடிகளும், கொடிகளும், காய்ந்து, சருகாகியது. மரங்கள் எல்லாம், இலைகளை உதிர்த்து விட்டு, மொட்டை யாக நின்று கொண்டிருந்தன.

அந்தக் காட்டில், பசியறியாமல் வாழ்ந்து வந்த அந்த யானைகள், உணவு கிடைக்காமல் வருந்தியது. அந்த யானைகள், தங்களின் பசித்த வயிற்றுக்கு, உணவு கிடைக்காவிட்டாலும், அவைகள், அங்கிருந்து வேறு நிலத்துக்குச் செல்லவில்லை, தாங்கள் பிறந்து வளர்ந்த தங்களுடைய சொந்த மண்ணிலேயே, அந்த யானைகள், வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 305)

(பாட்டு 305)

*"களிறு பிடிதழீஇப் பிறபுலம் படராது
பசிதின வருந்தும் பைதரு குன்றத்துச்
சுடர்த்தொடிக் குறுமகள் இணைய
எனைப்பயம் செய்யுமோ விடலைநின் செலவே."*

கதை–48

மூங்கில் காடு

ஒரு, பெரிய, காடு.

அந்தக் காட்டில், ஏராளமான மூங்கில் மரங்கள் இருந்தது. ஒரு, கோடையில், அந்த மூங்கில் மரங்கள் எல்லாம் பட்டு விட்டது. பட்டுப்போன அந்த மூங்கில் மரங்கள், ஒன்றோடு ஒன்று, உராய்ந்து உராய்ந்து, தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது.

அந்தக் காட்டில் வாழ்ந்த புலிகள், மூங்கில் மரங்கள், தீ, பிடித்து எரிவதையும், அந்தத் தீயில் இருந்து தாங்க முடியாத அனல், அந்தக் காடு பூராவும் பரவுவதையும் பார்த்து அதிர்ச்சி அடைந்தன. அந்தப் புலிகள், உயிருக்குப் பயந்து போய் அங்கிருந்து ஓட்டமாக ஓடுகின்றன.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 307)

(பாட்டு 307)

"ஞெலிகழை முழங்குஅழல் வயமா வெரூஉம்
குன்றுடை அருஞ்சுரம் செலவுஅயர்ந் தனையே
நன்றுஇது கொண்க நின்பொருளே
பாவை அன்னநின் துணைப்பிறந்து வருமே."

கதை–49

தலைப்பிள்ளை

ஒரு, சிறிய, கிராமம்.

அந்தக் கிராமத்தில் ஒரு சிறிய வீடு.

அந்த வீட்டில், ஒரு இளம்பெண்ணும், அவள் கணவனும் இருக்கிறார்கள். அந்தப் பெண், அவள் கணவனை காதலித்து திருமணம் செய்து கொண்டவள். அவளுக்கு, முதல் கர்ப்பத்தில், ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது.

குழந்தை, தொட்டிலில் படுத்திருக்கிறான்.

குழந்தையின் அப்பா, வெளிநாடு செல்லப் புறப் பட்டுக் கொண்டிருக்கிறான். அவனுக்கு, நெறைய்ய சம்பாத் தியம் பண்ணணும் என்று ஆசை. அவன், புறப்படுவதற்கு முன்னால், தொட்டிலில் படுத்திருக்கிற தன் குழந்தையைப் பார்க்கிறான். குழந்தை அப்பாவைப் பார்த்ததும் வாய் நிறைய சிரிக்கிறான். கால்களை உதைத்துக் கொண்டு, கையை உயர்த்தி உயர்த்தி அப்பாவைத் தூக்கச் சொல்கிறான்.

வெளிநாடு போக புறப்பட்டுக் கொண்டிருந்த அவன், குழந்தையைத் தூக்கி தன் மார்போடு அணைத்துக் கொள்கிறான். அவன், தன், குழந்தைக்கு முத்தம் கொடுத்து, முத்தம் கொடுத்து குழந்தையிடம் கொஞ்சி விளையாடிக் கொண்டிருக்கிறான்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 309)

(பாட்டு 309)

"வேனில் திங்கள் வெஞ்சுரம் இறந்து
செலவு அயர்ந்தனையால் நீயே நன்று
நின்றயந்து உறைவி கடுஞ்சூல் சிறுவன்
முறுவல் காண்டலின் இனிதோ
இறுவரை நாடநீ இறந்து செய் பொருளே."

கதை–50

மனைவி

ஒரு இளைஞன்.

அவனுக்கு, அழகான, ஒரு மனைவி இருக்கிறாள்.

அவள் நெற்றி, ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவள் கையில் அணிந்திருக்கிற வளையல்களும், ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவளுடைய மென்மையான தோள்களில் அணிந்திருக்கிற, விலையுயர்ந்த ஆபரணங்களும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது. அவள், கழுத்தில், ஒரு தங்கச் சங்கிலி அணிந்திருக்கிறாள். அதில் வட்ட வட்டத் தங்கக் காசுகள், கோர்க்கப்பட்டிருக்கிறது. அது, அவள் கழுத்தில் இருந்து அவள் அடி வயிறுவரை, நீளமாய் தொங்கிக் கொண்டிருக்கிறது. நீளமான அந்தத் தங்கக் காசு மாலையும், அவள் உடம்பில், ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அவள் கணவன், அவளை விட்டுப் பிரிவதே இல்லை. அவன், அவளைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிறான்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 310)

(பாட்டு 310)

"பொலம்பகம் பாண்டில் காசுநிரை அல்குல்
இலங்குவளை மென்தோள் இழைநிலை நெகிழப்
பிரிதல் வல்லுவை ஆயின்
அரிதே விடலைஇவள் ஆய்நுதல் கவினே."

கதை–51

ஒரு கிராமத்துப் பாட்டு

ஒரு பாலைவனத்தில், வழிப்போக்கர்கள், கூட்ட மாக, நடந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அது, பயங் கரமான, மிருகங்கள் வாழ்கிற, அச்சம் நிறைந்த காடு. அந்த வழிப் போக்கர்கள், முன்னால் எடுத்து, வைக்கிற ஒவ்வொரு காலடியையும், பயந்து பயந்துதான் எடுத்து வைக்கிறார்கள். அவர்கள் பயந்தது போலவே, அவர்கள் இது நாள்வரை கேட்டிராத, பயங்கரமான ஒரு சத்தத்தைக் கேட்கிறார்கள். அவர்கள் பயந்து போய் அப்படியே நின்று விடுகிறார்கள்.

அந்த வழிப் போக்கர்களுக்கு இடது பக்கத்தில், சற்று தொலைவில், ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில், ஏராளமான வேங்கை மரங்கள் இருக்கிறது. அந்த வேங்கை மரங்கள் பூத்திருக்கிறது. அந்த ஊர்ப் பெண்கள், அந்த வேங்கை மரங்களில் ஏறி, பூ பறித்துக் கொண்டிருக் கிறார் கள். பூ, பறிக்கிற அந்தப் பெண்கள், அவர்களுடைய பாலை நிலத்துக்கே உரிய "பஞ்சுரம் "ராகத்தில் அவுக கிராமத்துப் பாட்டை பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பெண்கள் பாடிய பாட்டுச் சத்தம்தான், அந்த வழிப் போக்கர்களின் காதில் விழுந்தது. அந்த வழிப் போக்கர்கள், இந்தக் கிராமத்துப் பெண்களின் பாட்டுச்

சத்தத்தை, மிருகங்களின் சத்தம் என்று தப்பாகப் புரிந்து கொண்டு பயந்து விட்டார்கள்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 311)

(பாட்டு 311)

"வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்
ஆர்இடைச் செல்வோர் ஆறுநனி வெரூஉம்
காடு இறந்தனரே காதலர்
நீடுவர் கொல்என நினையும்என் நெஞ்சே."

கதை–52

ஒரு பறவை

ஒரு, வறண்ட, காடு.

அந்தக் காட்டில், ஒரு பெரிய ஓமை மரம் இருக்கு. அந்த ஓமை மரம், இலைகளையெல்லாம் உதிர்த்தி விட்டது. அது, பட்டமரமாய், மொட்டையாய், நின்னுகிட்டிருக்கு. அந்த மரத்தில், ஒரு பருந்து உட்கார்ந்துகிட்டு இருக்கு. அது, ஒரு, பெண் பருந்து, அதன் அலகு, இரும்பு உளி மாதிரி உறுதி யாகவும், கூர்மையாகவும் இருக்கு. அதன் தலை வறண்டு போய் பரட்டையாய் இருக்கு. அது, அந்த வறண்ட காட்டில், ஒத்தீல உக்காந்துக்கிட்டிருக்கு. அந்தப் பருந்து, அந்தப், பெரிய காட்டில், தான் ஒத்தீல இருப்பதையும், மீள முடியாத துன்பத்தில் இருப்தையும், தன்னுடைய சொந்தக்காரர் களுக்குத் தெரியப்படுத்தணும் என்று நினைக்கிறது. அதுக்காக, அது, கதறிக் கதறி, கூப்பாடு போட்டு அழுதுக்கிட்டு இருக்கு.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 321)

(பாட்டு 321)

"உலறுதலைப் பருந்தின் உளிவாய்ப் பேடை
அலறுதலை ஓமை அங்கவட்டு ஏறிப்
புலம்புகொள விளிக்கும் நிலம்காய் கானத்து
மொழிபெயர் பல்மலை இறப்பினும்
ஒழிதல் செல்லாது ஒண்தொடி குணனே."

கதை–53

வெயில்

ஒரு, பெரிய காடு.

அந்தக் காட்டில், மூங்கில் மரங்கள் ஏராளமாக இருந்தது. அந்த மூங்கில் மரங்கள், உயரமாய், வளர்ந் திருந்தது.

கோடை வந்தது.

அந்தக் கோடை, நீண்டு கொண்டே போனது.

வெயில், நெருப்பு மாதிரி, சுட்டு எரித்தது.

அந்தக் காட்டில், உயரமாக வளர்ந்திருந்த மூங்கில் மரங்கள் எல்லாம் காய்ந்து, பட்டுவிட்டன.

அந்தப் பெரிய காட்டில் இருந்த, பெரிய பெரிய பாறாங் கற்கள் எல்லாம், தீ மாதிரி எரிந்து கொண்டிருக் கிற அந்த வெயிலில், உடைந்து, நொறுங்கிக் கொண்டிருக் கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 322)

(பாட்டு 322)

"நெடுங்கழை முளிய வேனில் நீடி
கடுங்கதிர் ஞாயிறு கல்பகத் தெறுதலின்
வெய்ய ஆயின முன்னே இனியே
ஒள்நுதல் அரிவையை உள்ளுதொறும்
தண்ணிய ஆயின சுரத்திடை ஆறே."

கதை-54

கள்ளிக் காடு

ஒரு, காடு.

அந்தக் காட்டில், கள்ளிச் செடிகள், பெரிய பெரிய, புதர்களாக, கூட்டமா இருக்கு.

ஒரு ஆண் நரி, அந்தக் கள்ளிக் காட்டில், பதுங்கி இருக்கு. அது, செக்கச் செவேர்னு செகப்பா இருக்கு. அதன் பற்கள் கூர்மையாக இருக்கிறது.

அந்த ஆண் நரிக்கு, அழகான ஒரு, இளம் மனைவி இருக்கிறாள். அவள், இப்போது, கர்ப்பமாக இருக்கிறாள். அவளுக்கு இது, முதல் கெர்ப்பம். அவளுக்கு, எல்லா கெப்பனக்காரிகளுக்கும் ஏற்படக் கூடிய, ஒரு வித, ஆசை நோய் ஏற்பட்டிருக்கிறது. ரத்தம் வடிய வடிய ஒரு கொழுத்த பன்றியின் கறியைத் திங்கனும் என்று, அவளுக்கு ஆசை. அவள், தன் ஆசையை, கணவனிடம் சொல்லுகிறாள்.

தன், பிரியமான, இளம் மனைவியின் ஆசையை நிறைவேற்றுவதற்காக, அந்த ஆண், நரி, அந்தக் கள்ளிக் காட்டில், ஒரு, கொழுத்த பன்றியை எதிர்பார்த்துக் கொண்டு பதுங்கி இருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 323)

(பாட்டு 323)

"வள்எயிற்றுச் செந்நாய் வயவுறு பிணவிற்குக்
கள்ளியும் கடத்திமைக் கேழல் பார்க்கும்
வெஞ்சுரக் கவலை நீந்தி
வந்த நெஞ்சம்நீ நயந்தோள் பண்பே."

கதை–55

இலை ஒலி

ஒரு, பெரிய, காடு.

அந்தக் காட்டில், ஒரு, பெரிய, அரசமரம் இருக்கு. அந்த அரச மரம், காய்த்துப் பழுத்திருக்கிறது.

அந்தப் பெரிய அரச மரத்துக்குக் கீழே, அந்த அரச மரத்தின் பழுத்த இலைகள், விழுந்து கிடக்கிறது. கீழே விழுந்து கிடக்கிற, அந்தப் பழுத்த இலைகள், காய்ந்து, சருகுகள் ஆகிவிட்டன. அந்தச் சருகுகளை, காற்று, புரட்டிப் புரட்டி, மேலே தூக்குகிறது. காற்று, அந்தச் சருகுகளை, மேலே தூக்கும் போது, அந்தச் சருகுகளில் இருந்து, சல சலன்னு, சத்தம் வந்து கொண்டிருக்கிறது.

ஏராளமாய் காய்த்து, ஏராளமாய்ப் பழுத்திருக்கிற, அந்த அரச மரத்துக்கு, வெளிநாடுகளில் இருந்து, ஏராளமான போகில் பறவைகள் வந்த வண்ணம் இருக்கிறது. அந்த போகில் பறவைகள், அந்த அரச மரத்தின் கீழே கிடக்கிற சருகுகள் எழுப்புகிற சத்தத்தை, காது கொடுத்து கவனமாகக் கேட்கிறது. "இந்தச் சத்தம் நாம் கேட்டு அறியாத சத்தமாக இருக்கிறது. நம் உயிருக்கு இதனால் ஆபத்து ஏற்படலாம்" என்று, அந்தப் பறவைகள் பயப்படுகின்றன.

அந்தப் பெரிய அரச மரத்துக்கு, அந்தப் போகில் பறவைகள், வெகு தொலைவில் இருந்து, பறந்து பறந்து, சிரமப்பட்டு வந்திருக்கின்றன. அவ்வளவு தொலைவில்

இருந்து வந்த அந்தப் பறவைகள், அந்த அரச மரத்தில் தங்கி, அந்தப் பழங்களைத் தின்னாமலேயே, அவைகள், திரும்பிப் போய்க் கொண்டிருக்கின்றன.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 325)

(பாட்டு 325)

"வேனில் அரையத்து இலைஒலி வெரீஇ
போகில்புகா உண்ணாது பிறிதுபுலம் படரும்
வெம்புஅலை அருஞ்சுரம் நலியாது
எம்வெங் காதலி பண்புதுணைப் பெற்றே."

கதை–56

ஓடை

ஒரு பெரிய்ய, பாலைவனத்தில், ஒரு ஆண் மான், தன் இளம் மனைவியையும், தன் குட்டியையும் அழைத்துக் கொண்டு, நடந்து வந்து கொண்டிருக்கிறது.

அது, ஒரு, கோடைக் காலம்,

வெயில், கொல்லு கொல்லு என்று கொல்லுகிறது.

நிலம், நெருப்பு மாதிரிக் கொதிக்கிறது.

அந்த மான்களின் கால்கள், வெந்து விட்டன.அந்த மான்களால் நடக்க முடியவில்லை. அந்த மான்கள், இளைப் பாறுவதற்கு நிழலைத் தேடுகிறது.

அந்தப் பாலை வனத்தில், மரங்களும், இல்லை. வேறு எந்த நிழலும் இல்லை.

அந்த மான்களுக்கு முன்னால் ஒரு ஓடை, இருக்கு. மழைக்காலத்தில், பெரிய மழை, இரவும் பகலும் இடை விடாமல் பெய்த போது, மழை நீர் பெருக்கெடுத்து, மண்ணை அறுத்துக் கொண்டு ஓடிய குறுகலான, ஒரு, சிறிய ஓடை அது.

அந்த மான்கள், நிழல் இல்லாத அந்தப் பெரிய பாலைவனத்தில் அந்தச் சிறிய ஓடையில் இறங்கி, அவைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கி நின்று கொண்டிருக்கின்றன.

ஓதலாந்தையார்

ஐங்குறுநூறு

(பாட்டு 326)

(பாட்டு 325)

*"அழல்அவிர் நனந்தலை நிழல்இடம் பெறாது
மடமான் அம்பிணை மறியோடு திரங்க
நீர்மருங்கு அறுத்த நிரம்பா இயவின்
இன்னா மன்ற சுரமே
இனிய மறையான் ஒழிந்தோன் பண்பே."*

கதை–57

நடுக்காடு

ஒரு, பெரிய, பாலை வனம்.

அந்தப் பாலை வனத்தில், இது, நடுக்காடு.

வெயில், இந்த நடுக்காட்டைச் சுட்டுப் பொசுக்கிக் கொண்டிருக்கிறது.

நிலம், நெருப்பு மாதிரிச் சுடுகிறது.

ஒரு, பெரிய, ஆண் யானை, நிலம் நெருப்பு மாதிரிச் சுடுகிற இந்த நடுக்காட்டில், வேனா வெயிலில், நடந்து வந்து கொண்டிருக்கிறது. அந்தப் பெரிய ஆண் யானைக்கு, ரொம்பச் சின்னக் கண்கள், அந்த யானைக்கு, ஒரு, தும்பிக்கை இருக்கு. அது, நீளமான தும்பிக்கை, அந்தத் தும்பிக்கையை, வரிகளும், புள்ளிகளும், அலங்கரித்துக் கொண்டிருக்கிறது.

அந்தப் பெரிய, ஆண் யானை நெருப்பு மாதிரிச் சுடுகிற இந்த நிலத்தில், கையை ஊன்றினால், கை வெந்து விடும் என்று, அது, மிகவும் எச்சரிக்கையோடு தன் தும்பிக்கையைச் சுருட்டி வைத்திருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 327)

(பாட்டு 327)

"பொறிவரித் தடக்கை வேதல் அஞ்சிச்
சிறுகண் யானை நிலம்தொடல் செல்லா
வெயில்முளி சோலைய வேய்உயர் சுரனே
அன்ன ஆர்இடை யானும்
தன்மை செய்தஇத் தகையோள் பண்பே."

கதை–58

கழுகு

ஒரு, பெரிய காடு.

அந்தக் காட்டில் உயரமான, ஒரு, பெரிய பாறை இருக்கு. அந்தப் பாறையின் உச்சியில், ஒரு பிணம் தின்னிக் கழுகு உக்காந்துகிட்டு இருக்கு. அதன் காதுகள் ரத்தம் மாதிரி, செக்கச் செவேர்னு செகப்பா இருக்கு.

கழுகு, உட்கார்ந்திருக்கிற, அந்தப் பெரிய பாறைக்கு நேர் எதிரில், பிணங்கள் கிடக்கு, அந்தப் பிணங்கள், அழுகி, ஊன் வடிஞ்சிகிட்டு, பிண நாத்தம் நாறிக்கிட்டுக் கிடக்கு.

தனக்கு முன்னால், தனக்குப் பிடித்தமான இரை இருந்தும், அந்தக் கழுகு, இரையைத் திங்கல.

"சகுனம் சரியில்லை..நல்ல, நேரம் வரட்டும்" என்று, அந்தக் கழுகு காத்திருக்கிறது.

வழிப் போக்கர்களைக் கொல்லுகிற, ஒரு, வேடன், பயங்கரமான, ஒரு, கொலை வில்லோடு ஒரு மரத்தில் ஏறி ஒளிஞ்சி நின்னுகிட்டிருக்கான். "இந்தக் கொலைகாரன் இங்கிருந்து போகட்டும்" என்று அந்தப் பிணம் தின்னிக் கழுகு பிணத்தைத் தின்னாமல் காத்திருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 355)

(பாட்டு 355)

"அம்ம வாழி தோழி நம்வயின்
நெய்த்தோர் அன்ன செவ்விய எருவை
கற்புடை மருங்கில் கடுமுடை பார்க்கும்
காடு நனி கடிய என்ப
நீடிஇவண் வருநர் சென்ற ஆறே."

கதை–59

பூ பூக்கும் காலம்

ஒரு, சிறிய கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில், ஒரு, சிறிய வீடு. அந்த வீட்டுக்குப் பின்னால், ஒரு சிறிய கொட்டாரம் இருக்கு. அந்தக் கொட்டாரத்தில், ஒரு, இளம் புங்கை மரம் இருக்கு. அது, இப்பத்தான், பூ, பூக்க, ஆரம்பித்து இருக்கிறது. அந்தப் பூக்கள் நெல் பொரி மாதிரி, அழகாக இருக்கிறது.

அந்த இளம் புங்கை மரத்தின் அடியில், ஒரு இளம் பெண், நின்று கொண்டிருக்கிறாள். அவளுக்கு இளம் முலைகள், இப்போதுதான் வளர்ந்து கொண்டு வருகிறது. அந்த இளம் முலைகள், அவளுக்கு கம்பீரமான அழகையும், எடுப்பான தோற்றத்தையும் தருகிறது.

அந்த இளம் பெண் நினைக்கிறாள்..

"என் இளம் முலைகள், எனக்கு அழகாகத்தான் இருக்கிறது. அவைகள் எனக்கு எடுப்பான தோற்றத்தையும் தருகின்றன. ஆனாலும் இது எனக்குப் போதவே போதாது. என் முலைகள் இன்னும் இன்னும் பருத்து, அவைகள் எனக்கு இன்னமும் வசீகரமான பேரழகைத் தர வேண்டும்."

அந்த இளம்பெண் அந்த இளம் புங்கை மரத்தில் இருந்து கொழுந்து இலைகளை பார்த்துப் பார்த்துப் பறிக்கிறாள். அவள், அந்தக் கொழுந்து இலைகளை அவள் ரவுக்கைக்கு உள்ளே, துடிப்போடு வளர்ந்து கொண்டு

வருகிற, அவளுடைய இளம் முலைகளின் மேல், அப்பி அப்பி வைக்கிறாள்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 347)

(பாட்டு 347)

"அவரோ வாரார் தான்வந் தன்றே
எழில்தகை இளமுலை பொலியப்
பொரிப்பூம் புண்கின் முறிதிமிர் பொழுதே."

கதை-60

பிஞ்சுகள்

ஒரு, பெரிய பாலைவனம்.

அந்தப் பாலைவனத்தில், கரடு முரடான ஒரு காடு.

அந்தக் காட்டில், ஒரு சிறிய பாதையில் வழிப் போக்கர்கள் கூட்டமாய் நடந்து போய்க் கொண்டிருக் கிறார்கள்.

அது, ஒரு, கோடை.

வெயில் சுட்டு எரித்துக் கொண்டிருக்கிறது. அந்த வழிப் போக்கர்கள், நடந்து நடந்து களைத்து விட்டார்கள். அவர்களால், மேற்கொண்டு நடக்க முடியவில்லை.

அவர்களுக்கு முன்னால் ஒரு, பெரிய, பலா மரம் இருக்கு. அந்தப் பலா மரம், இப்பொழுதான் காய்க்க ஆரம் பித்திருக்கிறது. அந்தப் பிஞ்சுக் காய்கள், வெயிலைத் தாங்க முடியாமல், வெம்பி, கீழே விழுந்து கிடக்கிறது.

அந்த வழிப் போக்கர்கள் அந்தப் பெரிய பலா மரத்தின் நிழலில் உட்கார்ந்து, இளைப்பாறுகிறார்கள். அவர்கள் கீழே விழுந்து கிடக்கிற, சிறிய, பலாக் காய்களைத் தின்று, பசியாறுகிறார்கள்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 351)

(பாட்டு 351)

"அத்தப் பலவின் வெயில்தின் சிறுகாய்
அருஞ்சுரம் செல்வோர் அருந்தினர் கழியும்
காடுபின் ஒழிய வந்தனர் தீர்கஇனி
பல்இதழ் உண்கண் மடந்தை நின்
நல்எழில் அல்குல் வாடிய நிலையே."

கதை–61

ஒரு நரி பயிர் ஆகிறது

ஒரு, பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், இரண்டு நரிகள் ஜோடியாக நின்று கொண்டிருக்கிறது. அவர்கள், கணவனும் மனைவியும்.

மனைவிக்கு அவள் கணவன் மேல், ரொம்ப பாசம், அவள், தன் கணவனை சந்தோஷப்படுத்த விரும்புகிறாள். அவள், கணவனிடம் தன்னைப் புணரும்படி சொல்லு கிறாள்.

அந்த ஆண் நரி, மனைவியின் ஆசையை புரிந்து கொண்டு, அவளை சந்தோஷப்படுத்த அது விரும்புகிறது.

அந்தப் பெரிய காட்டில் அந்த ஆண் நரி, தன் இளம் மனைவியைப் புணர்ந்து அவளை, பயிராக்கிக் கொண்டு இருக்கிறது.

சந்தோஷமாய் சிருஷ்டி விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிற, அந்த நரிகளின் அருகில் ஒரு பெண் மான், தன் குட்டியோடு வந்து கொண்டிருக்கிறது.

அந்தப் பெண் மானையும், அதன் குட்டியையும் அந்த ஆண் நரி ஒண்ணும் பண்ணல. மான்கள், அது பாட்டுக்கு, அது வழியில் போய்க்கொண்டிருக்கிறது. நரிகள், அது பாட்டுக்கு சிருஷ்டி விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 354)

(பாட்டு 354)

"ஈர்ம்பிணவு புணர்ந்த செந்நாய் ஏற்றை
மறியுடை மான்பிணை கொள்ளாது கழியும்
அரிய சுரன் வந்தனரே.
தெரிஇழை அரிவைநின் பண்புதர விரைந்தே."

கதை–62

பொற்காலம்

என் நண்பர் ஒருத்தர், தலை நகரில் இருக்கிறார். அவர், பெரிய செல்வந்தர். அவருடைய வீடு, நம் மன்ன ருடைய, அரண்மனை மாதிரி இருக்கு. அந்த அரண்மனை யோடு சேர்ந்து, ஒரு, பெரிய தொழு இருக்கிறது. அந்தத் தொழுவில் என் நண்பர் ஏராளமான யானைகளைக் கட்டி வைத்திருக்கிறார். பொதுவாக, யானைகளை இரும்புச் சங்கிலியால் கெட்டிப் போட்டிருப்பார்கள். என் நண்பர் அவருடைய யானைகளை, தங்க ஆசாரிகள், தங்கப் பட்டறையில் உருக்கிச் செய்த, தங்கக் கயிற்றால் கட்டிப் போட்டிருக்கிறார்.

த ங் க க யி ற் றா ல்.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 356)

(பாட்டு 356)

"உள்ளுதற்கு இனிய மன்ற செல்வர்
யானை பிணித்த பொன்புனை கயிற்றின்
ஒள்ளரி மேய்ந்த சுரத்திடை
உள்ளம் வாங்கத் தந்தநின் குணனே."

கதை-63

பாதை

ஒரு சிறிய கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில், ஒரு, சிறிய, வீடு,

அந்தச் சிறிய வீட்டில், ஒரு இளம்பெண்ணும், அவள் கணவனும் இருக்கிறார்கள். அவன், வெளிநாட்டில் இருந்து, இப்போதுதான் மனைவியிடம் வந்திருக்கிறான்.

அவன் மனைவிடம் சொல்லுகிறான்.

"நான், உன்னைப் பிரிந்து, பணம் சம்பாத்தியம் பண்ணணும் என்கிற ஆசையில் வெளி நாட்டுக்குப் போனேன். நான் போகும்போது பணத்தை மட்டுமே, நினைத்துக் கொண்டு போனேன். நீளமான அந்த காட்டுப் பாதை, நான் நடக்க நடக்க அது மேலும் வளர்ந்து வளர்ந்து, நீண்டு கொண்டே போவதாகத் தோன்றியது."

"நான், திரும்பி வரும் போது, என் மனதில், என் மனைவியை மட்டுமே நினைத்துக் கொண்டு வந்தேன். நான் போகும் போது போன அதே பாதையில்தான் திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். என்ன ஆச்சரியம். நான் நடந்து வந்த நீளமான அந்தக் காட்டுப் பாதையின் நீளம், குறைந்து குறைந்து நம்ம ஊர், பக்கத்தில் இருப்பதாக எனக்குத் தோன்றியது. என் மனைவியிடம் நான் சீக்கிரமாக வந்து விட்டேன்."

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 359)

(பாட்டு 359)

"அரும்பொருள் வேட்கையம் ஆகி நின்துறந்து
பெருங்கல் அதரிடைப் பிரிந்த காலைத்
தவநனி நெடிய ஆயின இனியே
அணியிழை உள்ளியாம் வருதலின்
நணிய ஆயின சுரத்திடை ஆறே."

கதை–64

செம்மண்ணூர்

ஒரு இளைஞன், ஒரு இளம் வேட்டுவ குலத்துப் பெண்ணை காதலித்து, அவளை, அவள் வீட்டுக்குத் தெரியாமல் கடத்திக் கொண்டு போகிறான்.

அவர்கள், ஒரு பாலைவனத்தில் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவன் அவளிடம் சொல்லுகிறான்..

"உன் அண்ணன்மார்கள் அவர்கள் பிறந்த செம்மண் கிராமத்தை மிகவும் நேசிக்கிறார்கள். அதனால்தான், அவர்கள், செம்மண் நிறத்தில் காவி வேட்டி உடுத்து கிறார்கள். உன் அண்ணன்மார்களிடம் சிலை மரத்தில் செய்த உறுதியான வில் இருக்கிறது. அவர்களிடம் கூர்மை யான அம்புகளும் இருக்கிறது. அவர்கள் வில்லிலிருந்து புறப்பட்டுப் போகிற அம்புகள் குறி தப்புவதேயில்லை. அதனால்தான் அவர்கள் கொலை செய்வதிலும் வல்லவர்களாக இருக்கிறார்கள். மிகவும் திறமைசாலிகளான அண்ணன்மார்களின் பாசத்திற்குரிய தங்கச்சி நீ.."

"என் தேவதையே"

"உன் இளம் முலைகள் அழகாக இருக்கிறது. அழகான உன் முலைகளில் தேமல்கள் தேவையில்லாமல் இருப்பதாக நினைக்கிறாய் அல்லவா..அது, தேமல்கள் இல்லை.

கடவுள், உன் பாதுகாப்புக்காக அனுப்பி வைத்திருக்கிற, கடவுள் உலகத்தின், பெண் இராணுவ வீரர்கள் அவர்கள்."

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 365)

(பாட்டு 365)

"சிலைவில் பகழிச் செந்துவர் ஆடைக்
கொலைவில் எயினர் தங்கை நின்முலைய
சுணங்குஎன நினைதி நீயே
அணங்குஎன நினையும் என்அணங்குறு நெஞ்சே."

கதை–65

உப்புக்கண்டம்

ஒரு, சிறிய, கிராமம்.

அந்தச் சிறிய கிராமத்தில் ஒரு பெரிய வீடு,

அந்தப் பெரிய வீட்டின் முற்றத்தில், உப்புக்கண்டம் காய்ந்து கொண்டிருக்கிறது. அதைக் கொத்திக் கொண்டு போவதற்கு பறவைகள் வருகின்றன. ஒரு பெண், அந்தப் பறவைகளை விரட்டிக் கொண்டிருக்கிறாள்.

அவள் அண்ணன்மார்கள், வேட்டையாடுவதில் சிறந்தவர்கள். அவர்கள், ஒரு பெரிய காட்டில் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்த மான்களை, வேட்டையாடிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தக் கொழுத்த மான் கறியில், உப்புச் சேர்த்து, அதை, வெயிலில், காய வைத்துக் கொண் டிருக்கிறாள் அந்த பெண்.

ஒரு இளைஞன், அந்த வழியில் வந்து கொண்டிருக் கிறான். அவன், அந்தப் பெண்ணைப் பார்க்கிறான். அவனால் அவள் மேல் வைத்தக் கண்களை, எடுக்க முடியவில்லை. பருவ எழில் பூத்துக் குலுங்குகிற, அந்தப் பெண்ணின் பேரழகு, ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

அந்த இளைஞன், அவள் அருகில் போகிறான். அவன் அவளிடம் சொல்லுகிறான்.

"அழகான பெண்ணே.."

"எப்பேர்ப்பட்ட பேரழகைப் பெற்றிருக்கிறாய்."
"மாந்தளிரே.."
"நீ என்ன தவம் செய்தாய்.?"

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 365

(பாட்டு 365)

"கணமா தொலைச்சித் தன்னையர் தந்த
நினஊண் வல்சிப் படுபுள் ஒப்பும்
நலம்மாண் எயிற்றி போலப் பலமிகு
நன்னல நயவரவு உடையை
என்நோற் றனையோ மாவின் தளிரே."

கதை–66

ஒரு ஆண் மான்

ஒரு பெரிய காடு.

அந்தப் பெரிய காட்டில், ஒரு ஆண் மான் தனியாக நின்று கொண்டிருக்கிறது. அந்த ஆண் மானுக்கு இரண்டு கொம்புகள் இருக்கு. அந்த இரண்டு கொம்புகளிலும், கிளைக் கொம்புகளும் இருக்கு. அந்த ஆண் மான் தன் மனைவியை, தன்னிடம் வரும்படி உருக்கமாகக் கூப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த ஆண் மான் இந்தக் காட்டில் கொஞ்ச நேரத் திற்கு முன்னால், தன் மனைவியை, கெட்டிப் பிடித்து, கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தது.

ஒரு புதரில், பதுங்கி இருந்த ஒரு புலி, இந்த மான் களை நோக்கி பாய்ந்து சென்றது.

புலியைப் பார்த்ததும் மான்கள் ஆளுக்கொரு திசையில் ஓடியது.

ஆண் மான் வடக்குத் திசையில் ஓடியது.

பெண் மான், தெற்குத் திசையில் ஓடியது.

புலி பெண் மானைத் துரத்திக் கொண்டு ஓடியது. அந்தப் பெண் மான் என்ன ஆனது..? தெரியல.

புலியிடமிருந்து தப்பிப் பிழைத்த இந்த ஆண் மான், தன் மனைவியைத் தன்னிடம் வரும்படி உருக்கமாகக் கூப்பிட்டுக் கொண்டு இருக்கிறது.

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 373)

(பாட்டு 373)

"நினைத்தொறும் கவிழும் இடும்பை எய்துக
புலிக்கோள் பிழைத்த கலைக்கோட்டு முதுகலை
மான்பிணை அணைதர ஆண்குரல் விளிக்கும்
வெஞ்சுரம் என்மகள் உய்த்த
அம்புஅமை வல்வில் விடலை தாயே."

கதை–67

சாபம்

ஒரு, பெரிய, நகரம்.

அந்தப் பெரிய நகரத்தில், ஒரு பெரிய மாளிகை.

அந்தப் பெரிய மாளிகையில், ஒரு இளம்பெண் இருந்தாள்.

மை எழுதிய, அவள் கண்கள், "பூ.."மாதிரி, அழகாக இருந்தது. அந்தப் பெண், அந்தப் பெரிய்ய மாளிகையில், இருந்து, வெளியேறி அவள் காதலனுடன் ஓடிப்போய் விட்டாள்.

அவளைப் பெற்ற தாய், மகளைப் பிரிந்த வருத்தத்தை தாங்க முடியமால், எப்போதும் அழுகையும் கண்ணீருமாக இருக்கிறாள். அவளுக்கு, ஊழ் வினை மேல் கோபம் வருகிறது. அந்தத் தாய், ஊழ்வினைக்குச் சாபம் கொடுக்கிறாள்..

"ஊழ் வினையே..ஊழ் வினையே.. "

"பொல்லாத ஊழ் வினையே.."

"என் மேல், கொஞ்சம் கூட இரக்கம் காட்டாமல், என்னிடமிருந்து என் மகளைப் பிரித்த கொடுமைக்கார ஊழ் வினையே.."

"நான் என் மகளைப் பிரிந்து, சித்தம் கலங்கி, கண்ணீர் விட்டு, அழுது கொண்டிருக்கிறேன். நான், வருத்தப்பட்டு, கண்ணீர் விட்டு அழுது கொண்டிருப்பதைப் போல், ஊழ் வினையே..நீ..என்னைக் காட்டிலும் பல

மடங்கு வருத்தப்பட்டு, கதறிக் கதறிக் கூப்பாடு போட்டு அழ வேண்டும். நீ, காட்டில் எரிகிற தீ யில் அகப்பட்டு, வெந்து, கருக வேண்டும்."

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 376)

(பாட்டு 376)

"நாடோறும் கலிழும் என்னினும் இடைநின்று
காடுபடு தீயில் கனலியர் மாதோ
நல்வினை நெடுநகர் கல்லெனக் கலங்கப்
பூப்புரை உண்கண் மடவரற்
போக்கிய புணர்ந்த அறன்இல் பாலே."

கதை–68

மகன்றில் பறவைகள்

ஒரு காடு.

அந்தக் காட்டில், பெரிய, வெண் கடம்ப மரம் இருக்கு. அந்த வெண் கடம்ப மரத்தின் அடிப்பாகம், செகப்பா செக்கச் செவேர்னு இருக்கு. அந்த மரத்தின் நிழல், கெட்டியாக இல்லாமல் வெயிலும் நிழலும் கலந்து கலந்து வரி வரியாக இருக்கிறது. அந்த நிழலில், ஒரு இளைஞனும், அவன் காதலியும் உட்கார்ந்து இருக்கிறார்கள். அவர்கள் பச்சையாய் பச்சைப் பசேர்னு இருக்கிற, நெல்லிக் காய் களைத் தின்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த இளம் காதல் ஜோடியைப் பார்க்கும் போது, மகன்றில் பறவைகள்தான் ஞாபகத்திற்கு வருகிறது.

மகன்றில் பறவைகளுக்கு அதன் சிறகுகள் நீளமாய் இருக்கும். அதன் கால்கள் குட்டையாய் இருக்கும். இந்த மகன்றில் பறவைகளில் கணவன் மனைவியாகச் சேர்ந்து வாழ்கிற காதல் பறவைகளை பிரிக்கவே முடியாது.

பிரிக்கவே முடியாத, காதல் பறவைகளான, மகன்றில் பறவைகளைப் போல் இந்த இளம் ஜோடியையும், பிரிக்கவே முடியாது. என்றுதான் தோணுகிறது.

"யார் பெத்த பிள்ளைகளோ..?"

"பாவமாருக்கு."

ஓதலாந்தையார்

ஐங்குறுநூறு

(பாட்டு 381)

(பாட்டு 381)

"பைங்காய் நெல்லி பலவுடன் மிசைந்து
செங்கால் மராஅத்த வரிநிழல் இருந்தோர்
யார்கொல் அளியர் தாமே வார்சிறைக்
குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைக் காத லோரே."

கதை–69

ஒரு தாய்க்கு, பெண் மக்களால் ஏற்படும் துன்பம்

ஒரு பெரிய, பாலைவனத்தில், கரடு முரடான ஒரு காட்டுப் பாதையில், ஒரு பகலில், சரியான வெயில் நேரத்தில் ஒரு இளைஞன் அவன் காதலியை கூட்டிக் கொண்டு போகிறான்.

அவன் போர் வீரன். அவன், பள பளன்னு, ஒளி வீசுகிற, கூர்மையான, ஒரு வேல் வைத்திருக்கிறான். அவன், கால்களில், நேர்த்தியாகச் செய்யப்பட்ட தண்டைகள் அணிந்திருக்கிறான்.

அவன் காதலி, அந்தப் பெரிய காட்டில், பறவைகள், "ஒலி " எழுப்பும் போதெல்லாம், பயந்து பயந்து, கண்களை மூடுகிறாள். அவர்கள், இளைப்பாறுவதற்காக, ஒரு கிரா மத்தில், தங்கி இருக்கிறார்கள்.

ஒரு, புதுப்பெண், தங்கள் ஊருக்கு வந்திருக்கிற செய்தி, அந்த ஊர் பூராவும் பரவுகிறது.

அந்தப் புதுப்பெண்ணைப் பார்க்க, அந்த ஊர்ப் பெண்கள் எல்லாரும் திரண்டு வந்து, அவள் முன்னால் கூடி நிற்கிறார்கள். அந்தப் புதுப்பெண், விலை உயர்ந்த, அழகான தங்க நகைகளை ஏராளம் அணிந்திருக்கிறாள்.

அவளை, வேடிக்கை பார்க்கக் கூடி இருக்கிற அந்த ஊர்ப் பெண்களில் ஒரு தாய் சொல்லுகிறாள்..

"தாங்கள் பெத்து வளர்த்த பெண் மக்களுக்கு, நகைகள் போட்டு அழகு பார்க்கிற தாய்மார்கள் அனுபவிக்கிற துன்பத்தைத்தான், இந்தப் பெண்ணைப் பெற்ற தாயும் அனுபவித்துக் கொண்டிருப்பாள்."

ஓதலாந்தையார்
ஐங்குறுநூறு
(பாட்டு 382)

(பாட்டு 382)

"புள்ஒலிக்கு அமர்த்த கண்ணள் வெள்வேல்
திருந்துகழல் காளையொடு அருஞ்சுரங் கழிவோள்
எல்லிடை அசைந்த கல்லென் சீறூர்ப்
புனைஇழை மகளிர்ப பயந்த
மனைகெழு பெண்டிர்க்கு நோவுமார் பெரிதே."

நன்றி..!

கல்யாணி சுயம்புலிங்கம்.

M. S. ரிஷி அவர்கள்.

S. செல்வம் அவர்கள்,

லட்சுமி பிரியா செல்வம் அவர்கள்,

S. கணேஷ் குமார் அவர்கள்

நாகஜோதி கணேஷ் குமார் அவர்கள்,

S. தவயோக ராஜன் அவர்கள்,

பேபி S. சஹானா

பேபி G. மோனிகா

ஐங்குறுநூறு கதைகள் அறுபத்தொன்பது..

M S R கிரியேஷன் வெளியிட்டுள்ள புத்தகங்கள்.

1) நற்றிணை கதைகள் நூறு - மு. சுயம்புலிங்கம்

2) குறுந்தொகை கதைகள் எழுபத்தைந்து - மு, சுயம்புலிங்கம்

3) ஐங்குறுநூறு கதைகள் அறுபத்தொன்பது.. - மு, சுயம்புலிங்கம்

தமிழ் அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க விரைவில் மூன்று புத்தகங்களின் திருத்திய பதிப்புகள் வெளி வரவுள்ளன.

மேலும் M S R Creation website ஒன்றை உருவாக்கி அதில் அனைவரும் இலவசமாக படித்துப் பயன்பெறும் வகையில், விரைவில் பதிவேற்றம் செய்ய உள்ளோம்.

அனைவரும் படித்துப் பயன் பெறுங்கள்

தங்கள் மேலான கருத்துக்களை எங்களுக்குத் தெரியப்படுத்தவும.

M S R கிரியேஷன்